03 JAN 2001
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கம் 8
விலை ரூபா 5.00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 19 புதன்கிழமை (3-1-2001) தொ. பேசி 3378 ஒலி: 15

லாலா சோப்
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்
சர்மிளன் ஸ்ரோர்ஸ்
பலாலி வீதி,
ஊரெழு
லாலாசோப் அச்சுவேலி
(கி 1045)

## ★ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய குழுக் கூட்டத்தில்

# ஜனாதிபதி கலந்துகொள்ளவில்லை

# அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு!

இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் தலைமை தாங்குவாரா?

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்த அறிவிப்பிற்கு அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பாக ஆராய்வதற்கென பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் நேற்றுக் கூடிய சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் எதுவும் ஆராயப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது,

இக்கூட்டம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற போதும் ஜனாதிபதி சந்திரிகா இக்கூட்டத்தில் கலந்துகொள்ளாமை கொழும்பு அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின மத்திய குழுக் கூட்டம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற போதும் ஜனாதிபதி அக் கூட்டத்திற்கு சமுகமளிக்காமை கட்சி வட்டாரத்தில் பலத்தபரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்க தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் நடத்த திட்டமிட்டுள்ள உள்ளூராட்சி

(8ம் பக்கம் பார்க்க)

## வவுனியா லொறிவிபத்தில் வேலணை வாசி மரணம்

(வவுனியா)

வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்க லொறியொன்று மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளார்.

வவுனியா ஹொறவப் பொத்தானை றோயல் தியேட்டருக்கு முன்னால் நடைபெற்ற இவ் விபத்தில் வேலணை மேற்கு சிற்பனை முருகமூர்த்தி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் தற்போது வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட எ. பிரகலாதன் என்பவரே மரணமானதாக அடையாளம் காணப்பட்டுள்ளார்

இறந்தவர் மதிய போசன

(8ம் பக்கம் பார்க்க)

## புதைகுழி இடத்தை அடையாளம் காட்டினார்!

(மந்திகை)

மிருசுவில் பகுதியில் 8 பேர் இராணுவத்தினரால் படுகொலைசெய்யப்பட்ட இடத்தை இச் சம்பவத்தில் முக்கிய சாட்சியான பொன்னுத்துரை மகேஸ்வரன் அடையாளம் காட்டினார்.

இவ்விடத்தை பலாலியிலிருந்து வந்த இராணுவப் பொலிசாருக்கும் கொடிகாமம் பொலிசாருக்கும் மகேஸ்வரன் அடையாளம் காட்டினார்.

இச்சம்பவம் நடைபெற்ற இடத்தை இராணுவப்பொலிசார் படம் பிடித்துச் சென்றுள்ளனர்.

பொலிசருடன் ஈ.பி.டி.பி அமைப்பைச் சேர்ந்த முக்கியஸ்தர் ஒருவரும் சம்பவம் நடந்த இடத்தைப்பார்வையிடச்சென்றிருந்தனர்.

மலசல கூடக் குழிக்குள் இறந்த ஆடும், 4 அடி நீளமான நாகபாம்பு ஒன்றும் உயிருடன் இருக்கக் காணப்பட்டது. (வ-23)

## வாக்குறுதிகளை நிறைவேற்றாத சந்திரிகா அரசு பதவிவிலக வேண்டும்

(கொழும்பு)

நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர் குலைந்து வாழ்க்கைச் செலவு உயர்வடைந்து ஊழல் மலிந்துள்ளது.

இது சம்பந்தமாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு போராட்டமொன்றை நடத்தவுள்ளோம்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி நேற்று வெளியிட்ட அறிக்கையொன்றில்தெரிவித்துள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட வாக்

[8ம் பக்கம் பார்க்க]

## ★ க.பொ.த சாதாரண தர விடைத்தாள் திருத்தும்பணி காலதாமதமாகும்

(யாழ்ப்பாணம்)

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணி திட்டமிட்டபடி இன்று ஆரம்பமாகமாட்டாதென கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடைத்தாள்களைத் திருத்தும் ஆசிரியர்களுக்கான அனுமதிக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ள போதும் திருத்துவதற்குரிய விடைத்தாள்கள் இன்னமும் வந்துசேரவில்லை எனவும் விடைத்தாள்கள் வந்துசேர்ந்ததும் திருத்தும் பணி வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெறும் எனவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ)

### மிருசுவில் படுகொலைகள்

## ராணுவத்தினரின் அடி; சித்திரவதை இவைகளே மரணத்துக்கு காரணம்

(மந்திகை)

கடந்த டிசம்பர் 19 ஆம் திகதி மிருசுவில் பகுதியில் இடம் பெற்ற படுகொலை சம்பவம் தொடர்பான சாட்சியங்களிருந்தும் அவதானிப்பு இறப்பு என்பனவற்றிலிருந்தும், பிரேத பரிசோதனை அறிக்கையிலிருந்தும் மிருசுவில் பகுதியில் புதைகுழியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட 8பேரின் மரணங்கள் சுட்டிக்காட்டக்கூடிய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட அடி, சித்திரவதை கூரிய ஆயுதங்களினால் குருதி நாளங்கள் வெட்டப்பட்டமையினால் ஏற்பட்ட இரத்தப் பெருக்கினலும், அதிர்ச்சி சேர்வினலும் ஏற்பட்ட மரணமென சாவகச்சேரி நீதிபதி அ. பிரேமசங்கர் தெரிவித்தார்

(8ம் பக்கம் பார்க்க)

## பாவனைக்கு உதவாத ஆயுதங்கள் கொள்வனவு

(கொழும்பு)

நாட்டில் தற்பொழுது நடைபெற்று வரும் யுத்தத்தினால் சிலர் செல்வந்தர்களாக மாறி வருகின்றனர். படையினருக்கு நவீனரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதாகக் கூறிக்கொண்டு பாவனைக்குதவாத ஆயுதங்களையும்கொள்வனவு செய்து வருகின்றனர், இதனால் அவர்கள் தொடர்ந்தும் செல்வந்தர்களாக மாறிவருகின்றார்கள்.

இவ்வாறு பிரதி சபாநாயகர் சரத்முனசிங்க தெரிவித்தார்;

அவர் மேலும் தெரிவிக்கையில்;

(8ம் பக்கம் பார்க்க)

### ரெலோ அமைப்பின் ஏற்பாட்டில்

## அரசின் இராணுவ நடவடிக்கையை சர்வ உலகிற்கு உணர்த்த மாநாடு!

[கொழும்பு]

தமிழீழவிடுதலைப்புலிகள் ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவித்தபின்னர் அரசினால் மேற்கொள்ளப்பட்ட இராணுவநடவடிக்கைகள் மூலம் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக இன்றுபத்திரிகையாளர் மகாநாடுஒன்றை தமிழ்க் கட்சிகள்கூட்டாக நடத்தவுள்ளன.

ரெலோ அமைப்பின் ஏற்பாட்டில் கொழும்பு கொலிட்டே இன் ஹொட்டலில் நடைபெறவுள்ள இப்பத்திரிகையாளர் மகாநாட்டிற்கு அகிலஇலங்கைத்தமிழ்க்காங்கிரஸ் தமிழர்விடுதலைக் கூட்டணி புளொட் மலையகமக்கள் முன்னணி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசிய தொழிலாளர் காங்கிரஸ் தேசியதொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

தமிழீழவிடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்

(8-ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

செல்வி செ.தேவநந்தினி என்பவரது தேசிய அடையாள அட்டை (747761647V) விசேட அடையாள அட்டை அலுவலக அடையாள அட்டை என்பன தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் வலம்புரி பணிமனையில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (2067)

### மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தில் வைகுண்ட ஏகாதசி மஹோற்சவம் கடந்த டிசம்பர் 29 ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்று வருகிறது.

இம்மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்சவமும் நிகழவுள்ளது. (உ-12)

# யாழ். கல்வியியல் கல்லூரி ஆங்கில தேர்ச்சிப் பரீட்சைக்கு

# தெரிவானோர் விபரம் வெளியானது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வியியல் கல்லூரியில் 2001ஆம் ஆண்டு பாடநெறியைப் பயில்வதற்கு அனுமதி பெறுவதற்கான தேர்ச்சிப் பரீட்சை இம்மாதம் 6ம் திகதி கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியில்காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 220க்குக் குறையாத மொத்தப் புள்ளிகளையும், க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் விஷேட சித்தியும் பெற்று விண்ணப்பித்தவர்கள் மட்டும் இப்பரீட்சைக்குத் தோற்றலாம் என உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்றுவோரின் பெயர்விபரங்கள் வருமாறு;

செல்வி பிருந்தா
நீர்வேலி.

செல்வி ஆர். கவிதா
15/1 சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை

செல்வி எஸ். கலைவாணி
இளவாலை.

செல்வி ரீ.மஞ்சுளா
கோப்பாய்

செல்வி வி.நாமகள்
புலோலி

ஏ.றோகினி
சங்கத்தானை

எஸ் சுதாஜினி
அராலி வடக்கு

வி.சாந்தினி
மீசாலை வடக்கு

எஸ் ஸ்ரீவித்தியா
வண்ணார்பண்ணை

யே.சி.தாமரை
தெல்லிப்பழை

எஸ். திருவேணி
கோண்டாவில் மேற்கு

எஸ் திவ்வியா
வண்ணார்பண்ணை

எஸ். எமிலியானுள்பிள்ளை
சூரியகட்டைக்காடு
நானாட்டான்

ரீ.கே குமரன்
அல்வாய் கிழக்கு

எஸ் ரஞ்சித்குமார்
கோண்டாவில் கிழக்கு

செல்வி எம்.ஜசிந்தா
பாஷையூர்

செல்வி.பீ வி ஜோசப்
113,கோவில் வீதி
யாழ்ப்பாணம்

செல்வி பி.மேபில்,
31/5 புது வீதி, அத்தியடி.

எம்.சி. நிசாந்தி
உரும்பிராய் தெற்கு

கே செல்வி
சப்பல் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்

து சாந்தினி
திருநெல்வேலி

எம்.பிரபாகரன்
திருநெல்வேலி,யாழ்ப்பாணம்

இதுதொடர்பான மேலதிக விபரத்திற்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி உபபீடாதிபதிஎஸ்.ஆர்.சத்தியேந்திராவுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ந-5)

# முதியவர் அழைத்து வரப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

கடந்த 7 மாதங்களாக நாவற்குழி மகுதியில் தனிமையில் வாழ்ந்து வந்த வயோதிபர் ஒருவரை கடந்த திங்களன்று பாதுகாப்பு படையினர் மீட்டு வந்துள்ளனர்.

கைதடி நாவற்குழியைச் சேர்ந்த ஆபரணம் ஞானப்பிரகாசம் (வயது 79) என்ற முதியவரே படையினரால் கூட்டி வரப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-12)

## விஞ்ஞான பீடம்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

விஞ்ஞான பீட விரிவுரைகளும், இதர செயற்பாடுகளும் தொடர்ந்து நடை பெறுகின்றன என்பதைச் சகல மாணவர்களுக்கும் அறியத் தருகிறோம்.

விஞ்ஞான பீடாதிபதி

02/01/2001 (2068)

## தொடரும்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் செயற்பாடுகளின் மூலம் பெற்றுக்கொண்ட அனுபவங்களையுமெல்லாம் ஒன்றுதிரட்டி இயற்கையிலிருந்து பெற்றுக்கொண்ட அதன்மீது பிரயோகிக்கக் கூடிய அதனை இலகுவாக ஆளக்கூடிய அல்லது வெல்லக் கூடிய புதிய படைப்புக்களை உருவாக்க இவர்கள்முயன்றுள்ளனர்.

### வளர்ச்சியின் பின்னணியில்

இந்த உருவாக்கல் சிந்தனையின் விளைவால் மெல்ல மெல்ல வளர ஆரம்பித்த இவர்களது சிந்தனைத்திறன் படிப்படியாக வளர்ச்சிகண்டு தற்பொழுது பூமிக்குப்பாலும் சென்றுவிட்டது இவர்களது சிந்திக்குமாற்றல் விண்வெளிக்கும் சென்றுவிட்டது பூமியிலேற்படும் அழிவுகளைதடுக்குமளவுக்கும் இவர்கள் இப்போது வளர்ச்சி கண்டுள்ளார்கள்.

விவசாயம், உற்பத்திக்கட்டமைப்பு, கைத்தொழில், உயிரியலாய்வுகள், தகவல்த் தொழில்நுட்பம், மருத்துவத் துறை, இயற்கையைச் சமநிலைப்படுத்துதல், இயந்திரமயமாக்கல், ஆயுத உற்பத்தி விண்வெளியாராய்ச்சியென்ற பாரிய விசாலமான பரப்புக்குள்ளும் இவர்களது சிந்தனையால் பெறப்பட்ட முயற்சிகள் புகுந்துவிட்டன. இந்த சமூகவளர்ச்சிகள் இனிவருங் காலங்களில் இவர்களை எந்த அளவுக்குக் கொண்டு சென்று விடப்போகின்றனவோ என்பதுதான் யாருக்கும் புரியாதபுதிராகத் தோன்றுகின்றது.

# பல்கலையில் பதாகைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சமூகத்தால் மேற் கொள்ளப்பட்டு வரும் எழுச்சி நிகழ்வுகளை யொட்டி. பல்வேறு வாசகங்கள்தாங்கிய பதாகைகள் பல்கலைக்கழக வளாகத்தில் தொங்க விடப்பட்டுள்ளன.

அரசே! யுத்தத்தைநிறுத்து! தமிழீழ விடுதலைப் புலிகளுடன்பேசு! சமாதான ஆண்டே 2001 வருக! அரசே! தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையைஅங்கீகரி! போன்ற வாசகங்களே காணப்படுகின்றன. (கூ)

# காணாமல் போனோர் முறைப்பாடு

[ஏறாவூர்]

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஆண்டில் காணாமல் போனோர் மற்றும் கைது செய்யப்பட்டோர் தொடர்பாக 214 முறைப்பாடுகள் மட்டக்களப்பில் அமைந்துள்ள தேசிய மனித உரிமைகள் ஆணையத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பிராந்திய இணைப்பாளர் கிங்ஸ்லிபாத்லட் தெரிவித்துள்ளார்.

இவர்களில் 186 பேர் மீளத் திரும்பியுள்ளதாகவும் 15 பேர் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வெளியே உள்ள பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் 13 பேர் தொடர்பான தகவல் இதுவரை கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்

இதேவேளை விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தம் பிரகடனம் செய்த கடந்த டிசெம்பர் 24 ஆம் திகதி முதல் இதுவரை எந்த ஒரு முறைப்பாடும் தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-108)

# பொங்கல் கவிதைப் போட்டி

எதிர் வரும் தைப்பொங்கல் தினத்தையொட்டி ''வலம்புரி'' வளர்ந்து வரும் இளம் கவிஞர்களிடையே கவிதைப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

கவிதைக்கான தலையங்கம்

**தைமகளே தமிழர்க்கு விடிவுதனைத் தாராயோ**

★ இத்தலையங்கத்தில் எட்டு அடிகளைக் கொண்டதாகக் கவிதை அமைதல் வேண்டும்.

★ சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.

★ எழுதப்படும் கவிதைகள் யாவும் **09-01-2001** க்கு முன்னதாக பொங்கல் கவிதைப் போட்டி-2001 வலம்புரி, இல-15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு சாதாரண தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அனுப்பப்படும் கவிதையுடன் வலம்புரியில் வெளிவரும் ''கவிதைப் போட்டி'' கூப்பன் தவறாது இணைக்கப்படுவது அவசியமாகும்.

★ தரமான கவிதைகள், பொங்கல் சிறப்பு மலரில் வெளியிடப்படுவதுடன் முதல் மூன்று இடத்தைப் பெறுபவர்களுக்குப் பரிசில்களும் உண்டு.

குறிப்பு: தைப்பொங்கல் கவிதைப் போட்டியில் பங்குபற்றும் அனைத்து இளம் கவிஞர்களும் வலம்புரியின் கவிதைக் குடும்பத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதுடன் அவர்களின் பெயர்களும், அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட அங்கத்தவர் இலக்கங்களும் விரைவில் வலம்புரியில் வெளியிடப்படும்.

## பொங்கல் கவிதைப் போட்டி-2001

வலம்புரி

15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம்.

முழுப்பெயர்: ____________________

முகவரி: ____________________

____________________

இதனுடன் இணைக்கப்பட்டுள்ள கவிதை என்னால் இயற்றப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

திகதி __________ ____________ ஒப்பம்


## ஸ்ரீசெல்வா

(யாழ்ப்பாணம்)

மாதவன் - ஸ்நேகா சார்லி நடித்த

**என்னவளே**

10-30 மட்டும்

விக்னேஸ், ரவளி நடித்த

**நீ எந்தன் வானம்**

2-30 மட்டும்

(கி-688)


# பிரிவுத்துயர் பகிர்வு

### திருமதி அன்னபூரணம் பொன்னையா

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த திருமதி அன்னபூரணம் பொன்னையா நேற்று காலமானார்.

இறுதிக்கிரியைகள் இன்று (3-1-2001) நண்பகல் நடைபெற்று உரும்பிராய் இளங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: சு. சிவநேசன்.

### இராசையா சிவலிங்கம்

தற்போது கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட இராசையா சிவலிங்கம் 30-12-2000 அன்று காலமானார்.

இறுதிக் கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

தகவல்: செ. இராசபூரணி (சகோதரி)

### பொன்னையா கமலரூபன்

(யாழ். பல்கலைக்கழக, தமிழ்த்துறை விரிவுரையாளர்)

வதிரி, நெல்லியடியைச் சேர்ந்த பொன்னையா கமலரூபன் 31-12-2000 அன்று அகாலமரணமடைந்தார்.

இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

தகவல்: பொ. கமலநாதன் (சகோதரன்)

### திருமதி திலகவதி சிதம்பரநாதன்

சாவகச்சேரியைச் சேர்ந்த திலகவதி சிதம்பரநாதன் 01-01-2001 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று கொக்குவில் கிழக்கில் நடைபெற்றன.

தகவல்: ச. சிதம்பரநாதன் (கணவர்)

வடக்கு - கிழக்கில்

# வேகமாக பரவும் எய்ட்ஸ் கொடூரம்

# கல்வி அறிவு இன்மையும் ஒரு காரணமாகும்

## யாழ்பல்கலைசமுதாயமருத்துவவிரிவுரையாளர்தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் கரையோரப் பகுதிகளிலும் மலையகத்திலும் எயிட்ஸ் நோய் வேகமாகப் பரவும் ஆபத்து நிலை தோன்றியிருப்பதாக யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை விரிவுரையாளர் நச்சினார்க்கினியன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கிய விசேட பேட்டியொன்றில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

குறிப்பாக வறிய மக்களிடத்தும் கல்வியறிவில்லாதவர்களிடத்தும் இந்நோய் பரவும் ஆபத்து அதிகரித்துக்காணப்படுகின்றது.

எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின், மக்களிடையே நேரடியாகச் சென்று அது குறித்த பூரண விளக்கங்களை அளிக்க வேண்டும் இதுவே இந்நோய் பற்றிய விழிப்புணர்வுக்கு நல்ல பலன் தரும் நடவடிக்கையாக அமையும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன், கல்வி கற்கும் மாணவர்களிடையே பாலியல் தொடர்பான கல்வியறிவினை ஏற்படுத்துவதன் மூலம், வளர்ந்து வரும் சமுதாயம், எய்ட்ஸ் எனும் அபாயகரமான நோயில் இருந்து தம்மைக்காக்க உறுதுணையாக இருக்கும்.

இதேசமயம், தமிழ் மொழி மூல பொது சுகாதார பரிசோதகர் மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர் ஆகியோர்க்கு இங்கு நிலவும் தட்டுப்பாடு மக்களிடையே நேரடியாகச் சென்று எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் பெரும் பின்னடைவினை ஏற்படுத்தியிருப்பதாகவும் நச்சினார்க்கினியன் சுட்டிக்காட்டியுள்ளார்.

(உ)

## யாழ். கடல் நீரேரியில்

# அதிகாலை 3 மணி முதல் மீன்பிடிக்க அனுமதிக்குக

### விநாயகமூர்த்திஎம்.பி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கரையோரப் பகுதி வாழ் மீனவர்களுக்கு அதிகாலை மூன்று மணியிலிருந்து 2 மைல் தூரத்தை உள்ளடக்கிய ஆழ் கடல் மீன் பிடிக்கும் அனுமதி வழங்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் அ. விநாயகமூர்த்தி பலாலி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திராவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவ் வேண்டுகோளில், அராலிப் பகுதியில் மேற்கண்ட நடைமுறையை கடற்றொழிலாளர் சிலர்பின்பற்றி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் யாழ். குடாநாட்டில் தொடரும் யுத்த நடவடிக்கையால் கரையோரப் பகுதி கடற்றொழிலாளர்கள் சீரான முறையில்தங்கள் தொழிலை மேற்கொள்ளமுடியாது நிர்க்கதிநிலையில்இருந்து வருவது இங்குகுறிப்பிடத்தக்கது.

(க-ச)

## கணனிதுறையில் சாதனை

# மூளைத் தொப்பிகள் விரைவில்பாவனையில்

(கொழும்பு)

தொடரும் நூற்றாண்டில் வியப்பூட்டும் பலவிடயங்கள் இடம் பெறுவதோடு, உலகு கணனி மயமாக ஆகிவிடும் என்று விஞ்ஞான துணிகதிர் விற்பன்னர் ஆதர் சி.கிளாக் தெரிவித்துள்ளார்.

கீபோட் மற்றும் குறை கணிப்பு சொப்ட் வேயர் இற்குப் பதிலாக 'Brain Cap' எனப்படும் 'மூளைத் தொப்பிகள்'பாவனைக்கு வரும். இந்தத்தொப்பிகளை தலையில் அணிந்ததும் மூளை சிந்திக்காமலே, இந்தத் தொப்பியிலுள்ள உபகரணங்கள் மனிதர்களை வழிநடத்தும் ஆற்றல்களைக் கொண்டிருக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பரிஸிலிருந்து வெளியான அறிக்கை ஒன்றின்படி, புதிய நூற்றாண்டில் ஏற்படும் தொழில்நுட்ப முன்னேற்றத்தில் நன்மையான, மோசமான விடயங்கள் உள்ளடங்கி இருக்கும் என்று நிபுணர்களும் விஞ்ஞானிகளும் குறிப்பிட்டுள்ளனர்

அதன்படி, கடுமையான வேலைகள் அனைத்தையும் றோபோக்கள் செய்யும் என்பது நன்மையான செய்தியாகும் ஆனால் இந்த றோபோக்கள் மனித இனத்தை தேவையற்றதாக்கி விடும் என்பது தீமையான செய்தியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

(ச)

# அளவெட்டிப் பகுதிக்கு, விரைவில் மின்சாரம்

## ஈ.பி.டி.பி. ஏற்பாட்டில்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டிப் பகுதிக்குமின்சாரம் வழங்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் உறுதியளித்துள்ளனர்.

மேற்படி பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்து 4 வருடங்களாகியும், மின்சாரம் வழங்கப்படவில்லை.

அதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கையாக தூண்கள் நாட்டப்பட்டு ஒருவருடமாகியும் மின்சாரம் வழங்கும் நடவடிக்கை பூர்த்தியாகாமல் இழுபட்டு செல்வதுடன் கிராமம இருளில் மூழ்கியுள்ளது

இது குறித்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரிடம் சம்பந்தப்பட்ட பொதுமக்களால் எடுத்துக் கூறப்பட்ட போதே மேற்படி உறுதிப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

(உ)

# சங்கேமுழங்கு

# தமிழரின் அவல வாழ்வில் மீண்டும் ஒரு பேரிடி

## இடம்பெயர் அவலம் தீர்வதெப்போ?

இன்று வட-கிழக்கில் உள்ள மக்கள் தமது சொந்த இருப்பிடங்களையும் சொத்து வருமானங்களையும் இழந்து இடம் பெயர்ந்து வசிக்கின்றனர். இத்தகைய குடும்பங்களுக்கே இடம் பெயர்ந்த உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் தற்போது ரூபா 750/-க்கு மேற்பட்ட வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இந்நிவாரணத்தை வெட்டுவதற்காக மீளாய்வு செய்யப்படவுள்ளது. இவ் வருமான எல்லை பொருத்தமானதா?.இன்று சராசரியாக 3 அங்கத்தவர்களைக்கொண்ட குடும்பமாயின், குடும்பத்தினைக்கொண்டு நடத்த அத்தியாவசியமாக 107X30=3210/- ரூபாவை உழைத்தே ஆக வேண்டும்.

எல்லாக் குடும்பத் தலைவனும் அத்தியாவசிய தேவையினைப் பூர்த்திசெய்யரூபா750/-க்குமேல்உழைக்கவேண்டும்.

எனவே எல்லாக் குடும்பங்களுக்கும் நிவாரணத்தை வெட்ட முடியுமா? அரச ஊழியருக்கு ரூபா.1000/- சம்பள உயர்வு வாழ்க்கைச் செலவினை ஈடுகட்டுவதற்கு என்றால் வறுமைக் கோட்டு வருமானஎல்லை ரூபா750/- ஆக இருத்தல் நியாயமா?

தென்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக இழப்பீடும் நிவாரணமும் வழங்கப்பட இங்கு மட்டும் நிவாரணத்தை வெட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அண்மையில் தென்மராட்சியின் இடப் பெயர்வின்போது எத்தனை பேர் இறந்தார்கள், காயப்பட்டார்கள், காணாமல் போனார்கள் என்பதை தென்மராட்சி உதவி அரச அதிபர் அல்லது வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு அமைச்சு கணக்கிட்டு நிவாரணம், இழப்பீடு வழங்கியுள்ளதா? இதனை யாரிடம் கேட்பது? கோடிக் கணக்கான ரூபாய்களை செலவழித்து போரை நடத்தும் அரசுக்கு வடபகுதி மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் மட்டும் பெரிய செலவாகக் கருதுகின்றது. இதனை, எமது பாராளுமன்ற அங்கத்தவர்கள் பார்த்துக் கொண்டு இருப்பது வேதனை தருகின்றது.

நாம் கேட்பது உங்களின் பழுதடைந்த அரிசியினையும். காற்றுப்போன மாகைக்கட்களையும் அல்ல எமது சொந்த இடத்தில் எம்மை நிம்மதியாக இருக்க விடுங்கள் என்பதே ஆகும்.

க. அச்சுதன்
கச்சாய் வீதி
சாவகச்சேரி.

## தொடரும்

# போக்குவரத்துப் பிரச்சினை வடபகுதி மக்கள் அவலம்

### மகேஸ்வரன் எம்.பி தெரிவித்துள்ளார்

(யாழ்ப்பாணம்)

கடந்த 6 வருடகாலமாக தொடரும் போக்குவரத்துப் பிரச்சினையால் வடபகுதி மக்கள் பெரிதும் துன்பமுற்று வருகின்றனர் என யாழ். மாவட்ட ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மக்களின் இந்த போக்குவரத்து பிரச்சினைக்கு நிரந்தரமானதும் உறுதியானதுமான தீர்வைக் காண அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரை அரசுக்குஅவகாசம்வழங்கியுள்ளோம்.

இந்தக் காலவரையறைக்குள் நாம் முன்வைத்துள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தவறுமிடத்து,

தமிழ்நாடு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலர் வை கோபாலசாமி ஊடாக இதுவிடயத்தை ஐநாவிற்கு கொண்டு செல்லவும் தயங்க மாட்டோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக ஐ தே.க தலைமைப் பீடத்திற்கும், ஜனாதிபதிக்கும், கடிதம் அனுப்பப் பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேசமயம், டீசல் மற்றும் எரிபொருள் விலை அதிகரிப்பைக் கண்டித்து தி. மகேஸ்வரன் உள்ளிட்ட ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்கள் டிசெம்பர் 6 ஆம் திகதி மாட்டுவண்டிலில் பாராளுமன்றம் சென்றமையும் குறிப்பிடத்தக்கது.

(உ)

## திருட்டுக் கும்பல் பிடிபட்டது

(சுன்னாகம்)

ஏழாலை வடக்குப் பகுதியில் அண்மைக்காலமாக பல திருட்டுச் செயல்களில் ஈடுபட்டுவந்த கும்பல் ஒன்றை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸில் ஒப்

## பிரதேச செயலகம் இரு இடங்களில்

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகம் சம்பந்தப்பட்ட பொதுமக்களின் நன்மை கருதி வடமராட்சியிலும், யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் உள்ள ஈழநாடு காரியாலயத்திற்கு அருகாமையிலுமாக இரு இடங்களில் இயங்கி வருவதாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் எஸ் புத்திசிகாமணி தெரிவித்துள்ளார்.

## நஞ்சருந்தி மரணம்

(யாழ்ப்பாணம்)

குடும்பத்தில் ஏற்பட்ட மனக்கசப்பு காரணமாக விரக்தியுற்ற குடும்பஸ்தர் ஒருவர் நஞ்சருந்தி தன் வாழ்வையே முடித்துக் கொண்டார்.

சங்கானை வைத்தியசாலை வீதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கிருஷ்ணமூர்த்தி ரஞ்சன் என்பரே இவ்வாறு மரணமானவர் எனத் தெரியவந்துள்

## இராசி பலன்

3-01-2001
(மார்கழி 19 புதன்)
அட்டமி மு.ப 11 58 வரை
ரேவதி மு.இ 9.15 வரை
ராகுகாலம 12.30- 2.00
சுபநேரம் 5 00- 6.30

**மேடம்**
மன அமைதியின்மை, தன விரயம், காரிய அலைச்சல், பிரயாணம்.

**இடபம்**
தனலாபம், கௌரவம், மன மகிழ்ச்சி, காரியம் கைகூடும்.

**மிதுனம்**
தொழில் லாபம், பணியாளர் உதவி, முயற்சி வெற்றி, அதிகார நிலை

**கடகம்**
உடல் உழைப்பு, வயிற்றுக் கோளாறு, பயம் உண்டாதல், முயற்சி தாமதம்.

**சிங்கம்**
கடன்காரர் மனஸ்தாபம், வியாதி, எதிர்பாராத அச்சம், காரிய தாமதம்.

**கன்னி**
பிரயாணம், போசனசுகம், சுவாரஸ்யம், தனவரவு.

**துலாம்**
சத்துரு ஜெயம், தொழில் விருத்தி, சுகவாழ்வு உண்டாகும், காரிய ஜெயம்.

**விருச்சிகம்**
மனக்கவலை, சிறுவியாதி, பிரயாண தடங்கல், காரிய தாமதம்.

**தனுசு**
நண்பர்களைக் குறைவு, தாய்வழி உறவு, முயற்சி தாமதம்.

**மகரம்**
முயற்சி வெற்றி, சந்தோசமான நிழ்வு, வாக்கு மேன்மை, தனவரவு.

**கும்பம்**
கௌரவக் குறை, காரிய தாமதம், தனவிரயம், வாக்குக் கலகம்.

**மீனம்**
நல்ல உணவு கிடைக்கும், சயன சுகம், உடல்நலம், காரிய ஜெயம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## இவ்வாண்டு ஆசிரியர் கலாசாலையிலிருந்து வெளியேறி
# நல்லூர் கோட்டத்தில் நியமனம் பெறுவோர்
# தீவக கல்வி வலயத்திற்கு இடமாற்றப்படுவர்
### கல்விப்பணிப்பாளர் கூட்டத்தில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

இவ் ஆண்டில் ஆசிரியகலாசாலையிலிருந்து வெளியேறி நல்லூர், யாழ்ப்பாணம் கோட்டங்களிற்கு நியமனமாகும் சகலஆசிரியர்களும் தீவக கல்வி வலயத்திற்கு இடம் மாற்றம் செய்யப்படுவர்.

மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் கலாநிதி.ச. நா. தணிகாசலம்பிள்ளை தலைமையில் கடந்த 2ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் மேற்கண்டமுடிவு எடுக்கபட்டது.

ஐந்து வலய கல்விப்பணிப்பாளர்கள், இரண்டு தமிழ் ஆசிரிய தொழிற்சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்ட மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட ஏனைய விடயங்களாவன.

தீவகத்திற்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள் இரண்டு வருட காலசேவையின் பின்னர் முன்னைய பாடசாலைக்கு என்ன திகதியில், மாற்றப்படுகின்றார்கள் என்று திகதி குறிப்பிட்டு கடிதம் வழங்கப்படவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

அக்கூட்டத்தில் மேலும், யாழ்.மாவட்ட வலயங்களிலிருந்து கல்வி அமைச்சு சுற்று நிருபத்தால் குறிப்பிடப்பட்ட கஷ்டப்பிரதேச பாடசாலைகட்கு இடமாற்றம் கேட்டு விண்ணப்பிக்கும் ஆசிரியர்களுக்கு, இடமாற்றம் வழங்கும்போது அவர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடும் மூன்று பாடசாலைகளின் ஏதேனும் ஒன்றை உரிய வலயக் கலவிப்பணிப்பாளர் வழங்குதல் வேண்டும். அப்படியும் இல்லாத நிலை ஏற்பட்டால், குறிப்பிடப்படும் மூன்று பாடசாலைகளில் கடமையாற்றும் ஏதாவதுஒரு ஆசிரியரை வேறு ஒரு பாடசாலைக்கு இடமாற்றம் செய்து உரிய விண்ணப்பத்துக்கு முன்னுரிமை வழங்கல் வேண்டும்.

இடமாற்றம் கேட்டு ஆசிரியர்களால் வலயங்களுக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களே, தகுந்த சிபார்சுடன் வலயக் கலவிப்பணிப்பாளர்கள் யா/மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளருக்குஅனுப்புதல் வேண்டும் அந் மேன்முறையீடுகள், மேன்முறையீட்டு இடமாற்றச் சபையில் பரிசீலனை செய்யப்படும்.

வெளிமாவட்டத்தில் கடமைபுரியாமல்யாழ். மாவட்டத்தில் தொடர்ச்சியாக வசதியான பிரதேசத்தில் 6 வருடங்களும் கஷ்டமான பிரதேசத்தில் 4 வருடங்களும் கடமையாற்றும் 50 வயதுக் குட்பட்ட ஆசிரியர்களை வலயம் அமைந்துள்ள ஏதேனும் ஒரு பாடசாலைக்கு மாற்றியபின் கஷ்டப் பிரதேசத்தை விரும்பும் இடமாற்ற விண்ணப்பதாரிக்கு அவர் விரும்பும் பாடசாலையை வழங்கலாம்.

ஆசிரிய கலாசாலையிலிருந்து 2001ம் ஆண்டு வடமராட்சிவலயக்கல்விப் பணிப்பாளர் ஒப்புதல் வழங்கினார்.

ஆசிரியர் கலாசாலையிலிருந்து வெளியேறி வெளி மாவட்டங்களுக்கு செல்லமுடியாத ஆசிரியர்களை மாகாண கல்விப்பணிப்பாளரின் அனுமதியுடன் தீவக வலயத்திற்கு இடம்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான சம்பளங்களை வழங்குவதற்கு தீவக வலயக்கல்விப்பணிப்பாளர் ஒப்புதல் அளித்தார்.

மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அடங்கிய பிரதிகள் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், யாழ்.மாவட்ட வலய கல்விப் பணிப்பாளர், மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டன. (க)

## சமுர்த்தி செயலணி கூட்டம்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொக்குவில் தென்.கிழக்குஜே/103 கிராம சேவையாளர்பிரிவில்சமுர்த்தி செயலணி அமைக்கும் கூட்டம் எதிர்வரும் 7ம்திகதி பிற்பகல் 3.00 மணிக்கு இடம் பெற உள்ளது.

கொக்குவில் கலட்டிமெ.மி.த.க பாடசாலையில் வலய முகாமையாளர் ஆர். ஜெயதாஸ் தலைமையில் மேற்படி நிகழ்வு இடம் பெற உள்ளது.

மேற்படி நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் க.குணராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். [க-03]

## தையல் பயிற்சி

[ஊர்காவற்றுறை]

வேலணை இளைஞர் கழக பிரதேச சம்மேளனமும் யாழ்ப்பாண இளைஞர் கழக மாவட்டச் சம்மேளனமும் இணைந்து வேலணையில் தையல் பயிற்சி நெறி ஒன்றினை ஆரம்பிக்கவுள்ளனர்.

இப்பயிற்சி நெறிஇம் மாதம் நடுப்பகுதியில்ஆரம்பிக்கப்படவுள்ளதால், பங்கு கொள்ள விருப்பமுடையவர்களைஎதிர்வரும் 10 ஆம் திகதிக்கிடையில் தங்களுடைய விண்ணப்பப் படிவங்களை மேற்படி இளைஞர் கழகங்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

[உ-75]

## சிப்பாய் மரணம்

விடுமுறையைக் கழிப்பதற்காக வீடு செல்ல இருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் தென்மராட்சி நுணாவில் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பலாங்கொடையைச் சேர்ந்த எம். ஜி. அத்தநாயக்கா (வயது 30) என்பவரே இவ்வாறு மர்மமான முறையில் மரணமானவராவார்.

இவரது சடலம் கொடிகாமம் பொலிஸாரால் சாவகச்சேரி நீதவான் அ. பிரேம்சங்கர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவரது சடலத்தில் காயங்கள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. [ந-5-23]

## யாழ். மாவட்டத்தில்
# அபிவிருத்தி எதுவுமின்றி
# மூவாயிரம் குடியிருப்புகள் நாசம்
### அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் தகவல்

(தென்மராட்சி)

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்தகுடும்பங்களுக்காக, பல இடங்களில் உதவி வழங்கும் நிறுவனங்களினால் சுமார் 3 ஆயிரம் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டன.

ஆயினும் இத்திட்டத்தில் காணப்பட்ட பல்வேறு விதமான குறைப்பாடுகள் பற்றி சுட்டிக் காட்டப்பட்ட போதிலும் கூட, அவற்றினைத் திருத்துவதற்கான எந்தவித முயற்சிகளையும் திட்டங்களையும் அமுல் செய்த நிறுவனங்கள் இதுவரையும் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை.

இவ்வாறு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் கொழும்பிலுள்ள மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள குடாநாட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இணையத்தின் கௌரவ செயலாளரான எம். எவ். இராஜேந்திரத்தினால் கையொப்பமிட்டு அனுப்பப்பட்ட அவ் அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாவது,

மேற்படி திட்டங்களை அமுல் செய்த நிறுவனங்களின் அசிரத்தை காரணமாக, மழை காலங்களில் கொட்டகைகளில் குடியிருப் போர் சொல்லொணா துன்பங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

குடியிருப்புக்கள் அமைந்துள்ள நிலத்தில், நீர் பல இடங்களிலும் தேங்கி நிற்கின்றது.

கூரைகள் சீரில்லாத நிலையில் இருப்பதால் மழை நீர் குடியிருப்புக்களுக்குள் உட்புகுந்து பக்கச் சுவர்கள் கரையுண்டு இடிந்து வீழும் நிலையை எய்தியுள்ளன.

அத்துடன் மல கூடங்கள் நிரம்பியுள்ளதால் சகிக்க முடியாத மணம் வீசுகிறது.

இதைவிட, வழங்கப்படும் நிவாரண உதவிகள் தரமானதாக இல்லை என சுட்டிக் காட்டப்பட்ட போதிலும் எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், விவசாயிகள் எதிர் நோக்கும் கஷ்டங்கள், மீன்பிடி தொழிலில் ஈடுபடுவோர் எதிர் நோக்கிவரும் துன்பங்கள் யாழ்ப்பாணத்துக்கும் வெளிமாவட்டத்திற்கும் இடையே போக்குவரத்தை மேற் கொள்வதில் மக்கள் எதிர்நோக்கி வரும் இடர்கள், மிதிவெடி அபாயம், தொலைபேசித் தொடர்புகள் விஸ்தரிக்க வேண்டிய அவசியம் என்பன குறித்தும்விபரமாக அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-77)

## யாழ்.நகரில் சிலை அமைப்பு

(யாழ்ப்பாணம்)

அமரர் விஜயகுமாரதுங்காவின் வெண்கலச்சிலை ஒன்று யாழ்ப்பாணம் ஆரியகுளம் பகுதியில் நிறுவப்படவுள்ளதாக ஸ்ரீலங்க சுதந்திரக்கட்சி வடபிராந்திய அமைப்பாளர் வேல்முருகு தங்கராஜா தெரிவித்துள்ளார்.

12 இலட்சம்ரூபா செலவில் 10 அடி உயரமானதும் ஒன்றறை தொன் நிறையுடையதுமான தனி வெண்கலத்திலான அமரரின் சிலையை மொறட்டுவறாவத்த வத்த கிறிஸ்தோப்பர் சாந்த என்பவர் வடிவமைத்துள்ளார் என்றும் தெரிவிக்கபடுகின்றது. (க-12)

## கடந்த வருடம் மட்டும்
# யாழ். போதனா வைத்தியசாலையில் 3இலட்சம் பேர் சிகிச்சை பெற்றனர்
### வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல்

[யாழ்ப்பாணம்]

யாழ் போதனா வைத்தியசாலையில் கடந்த வருடத்தில் சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர் சிகிச்சை பெற்றுச் சென்றிருப்பதாக வைத்திய சாலையின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன

இவர்களில் வெளிநோயாளர் பிரிவில் சுமார் 2 இலட்சத்து 90 ஆயிரம் பேரும், விடுதிகளில் தங்கி சுமார் 56 ஆயிரம் பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதைவிட, அரச ஊழியர்களுக்கான வைத்தியச் சான்றிதழ் வழங்கும் வகையில் ஆயிரத்து 632 பேருக்கு வைத்திய பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், இரண்டாயிரமாம்ஆண்டில்சுமார் ஐயாயிரம் பிறப்புக்களும், சுமார் 750 இறப்புகளும் இவ் வைத்திய சாலையில் பதிவாகியுள்ளன:

இங்கு இடம்பெற்ற 275 மரண விசாரணைகளின் பிரகாரம், 149 பேர் இயற்கை மரணத்தையும், 55 பேர் தற்கொலை மரணத்தையும் 14 பேர் எறிகணை மற்றும் துப்பாக்கிச் சூட்டினால் மரணத்தையும் ஏனையோர் விபத்து உட்பட வெவ்வேறு காரணங்களினால் மரணத்தை தழுவியிருப்பதாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வகையில், தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை மார்கழி மாதங்களில் முறையே சுமாராக 25 ஆயிரத்து 133, 21 ஆயிரத்து 340, 26 ஆயிரத்து 236, 23 ஆயிரத்து 567, 12 ஆயிரத்து782, 22 ஆயிரத்து 981, 26 ஆயிரத்து577, 30 ஆயிரத்து 328, 23 ஆயிரத்து 758, 26 ஆயிரத்து 483, 27 ஆயிரத்து 746, 27 ஆயிரத்து 521 பேர் சிகிச்சை பெறும் வகையில் யாழ். போதனா வைத்திய சாலையை நாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. [உ-12]

# முஸ்லிம்களின் சொத்துக்கள் சூறை
# யாழ். நகரில் பகலில் சம்பவம்
### முறையீடு செய்தும் பயனில்லையாம்

(யாழ்ப்பாணம்)

முஸ்லிம் சகோதரர்கள் பலர் மீண்டும் யாழ் குடாநாடு திரும்பியுள்ள நிலையிலும், அவர்கள் சொத்துக்கள் சூறையாடும் சம்பவங்கள் தொடர்கதையாக இடம் பெற்று வருவதாக சம்பந்தப்பட்டவர்களால் கவலைவெளியிடப்பட்டுள்ளது.

90 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமது சொத்துக்களை விட்டு தென்பகுதி சென்ற முஸ்லிம் இனத்தவர் பலர் தற்போது யாழ் குடாநாடு திரும்பி தமது தொழில்களை கவனிக்க ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், இடைப்பட்ட காலத்தில் அவர்களுடைய சொத்துக்கள் சூறையாடப்பட்டு தற்போது வெறும் கட்டடங்கள் மட்டுமே எஞ்சியிருந்தன.

ஆனால், திருட்டுக் கும்பல்கள் சில கட்டடங்களை இடித்து கற்களை ஏற்றுவதிலும், பெறுமதியான கம்பிகளை திருடிச் செல்வதிலும் உரிமையாளர் கண்முன்னாலேயே ஈடுபட்டுவருவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் 'கைங்கரியத்தில்' பெண்கள் சிலரும் ஈடுபடுவதுடன், தட்டிக்கேட்டால், தடுக்க நீ யார்?' என்ற வகையில் நடந்து கொள்வதாகவும் கூறப்படுகிறது.

இதுஇவ்வாறிருக்க, மேற்படி களவுகள் தொடர்பாக பாதுகாப்பு தரப்பினர்க்கு சுட்டிக் காட்டப்பட்ட போதிலும் அவர்களும் இது விடயத்தில் அசிரத்தைப் போக்கை கடைப்பிடித்து வருவதாகவும் பெரிதும் மனக்குறை சம்பந்தப்பட்டவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், மேற்படி அநியாய நடவடிக்கைகள் குறித்தும் அதனை தடுத்து நிறுத்த வேண்டிய அவசியத்தினை விளக்கியும் அமைச்சர்டக்ளஸிற்கு ஜும்மா பள்ளிவாசல் சார்பாக கடிதம் ஒன்று கையளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (உ)

## கவனிப்பாரற்ற வீதி

(கோப்பாய்)

கோப்பாய் இராசவீதியையும் பருத்தித்துறை வீதியையும் இணைக்கும் குறுக்கு வீதி நீண்ட காலமாகத் திருத்தம் செய்யப்படாமல் கவனிப்பாரற்ற நிலையில் உள்ளது.

கோப்பாய் தெற்கு மாதா கோவிலுக்கு அண்மையில் ஆரம்பமாகும் இவ்வீதியின் இரு பக்கங்களும் பற்றைகள் நிறைந்து காணப்படுகிறது.

(உ-79)

## இன்று ஒரு தகவல்

# கண்ணைக் கெடுக்காதீர்

ஒருத்தர் ''நான் எதற்குமே கண் கலங்குவதில்லை என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டிருந்தார்''. அப்படிப் பட்டவரே ஒரு நாள் கண் கலங்கிக் கொண்டிருந்தார். எனக்கு ஆச்சரியம். அவரிடம் போய் ''என்ன ஆனது'' என்று கேட்டேன். கண்ணிலே தூசு விழுந்து விட்டது என்றார். துயரத்தினால் கலங்காதவர்கள் கூட தூசுவிழுந்தால் கலங்கித் தான்ஆக வேண்டும்.

கண்ணிலே தூசு விழுந்தால் என்ன நடக்கும் தெரியுமா? உடனே ஒரு உறுத்தல் ஏற்படுகிறது. கண்ணால் இந்த உறுத்தலைப் பொறுத் துக்கொள்ள முடியவில்லை. உடனே மூளைக்கு முறையிடுகிறது மூளையும் ஒரு உத்தரவுபோடுகிறது. அந்த உத்தரவுப்படி கண்ணிலேயுள்ள நீர் சுரப்பிகள் உடனடியாக வேலைசெய்யக் கண்ணீர் பெருகுகிறதுஅந்தக் கண்ணீர் தூசியை வெளியே கொண்டு வந்து தள்ளி விடும். இது இயற்கை கொடுத்திருக்கிற பாதுகாப்பு.

சில சமயத்தில் கண்ணில் விழுகிற தூசு வசதியாக சில இடத்தில் போய் ஒட்டிக் கொள்ளும். என்ன தான் கண்ணீர் வெள்ளமாகபெருகினாலும் தூசு அசைந்து கொடுக்காது. இது கண்ணில் இருக்கிற வரைக்கும் தொல்லை தான். உடனடியாகக் கண் வைத்தியரிடம் போவது தான் நல்லது. அவர் தூசை எடுத்து விட்டு மருந்து போட்டு விடுவார்.

கண்ணிலே உறுத்தல் வந்து விட்டால் என்ன செய்கிறோம்? கைக் குட்டையை எடுத்து அதைப் பந்து மாதிரி உருட்டிவாயில் வைத்துஊதி, கைக்குட்டை கொஞ்சம் சூடானதும் கண்ணிலே வைத்து அழுத்துகிறோம். ஒத்தடம் கொடுக்கிறதாக நினைப்பு, இதனால் என்ன ஆகிறது தெரியுமா? கைக் குட்டையில் இருக்கிற அழுக்கு, வாய்க்காற்றிலுள்ள நுண்ணுயிர் எல்லாம் சேர்ந்து கண்ணுக்குள்போய்விடும். இதெல்லாம் மிகவும்தவறுஎன்றுடாக்டர்கள் சொல்கிறார்கள்.

இன்னொரு வேடிக்கை தெரியுமா? கண்ணில் தூசு விழுந்துவிட்டதென்று, ஒருவர் இன்னொருவரிடம் சொல்லுவார். உடனே அவர் எல்லாம் தெரிந்தவர் மாதிரி, அவரின் கண்ணை விரலால் விரித்துப் பிடித்து வாயால் வேகமாக ஊதுவார். தூசை விரட்டுகிறாராம். கண்ணில் உள்ள தூசு போகாது இவரின் வாயிலுள்ள கிருமிகள் தான் கண்ணுக்குப் போய்ச் சேரும். இன்னும் சிலர் சாதாரணமாக யோசனைகள் எல்லாம் சொல்லுவார்கள். வெண்ணெய், நந்தியாவட்டைச்சாறு, விளக்கெண்ணெய், கோழிக்கால் இரத்தம் இவைகளில் எதையாவது கண்ணிலே விடும்படி சொல்லி விட்டுத் தன் பாட்டில் போய் விடுவார்கள்.

வெண்ணெயில் கொழுப்பு அமிலம் இருக்கிறது. நந்தியாவட்டைச் சாற்றிலிருந்து காளான் வந்து தொற்றிக் கொள்ளும். காளான் தொற்றுச் சில சமயம் கண்ணையே அழித்து விடும். விளக்கெண்ணெயில் உள்ள கலப்படப் பொருள் கண்ணை உறுத்திச் சிவக்க வைத்து விடும். இவையே இப்படியென்றால் கோழிக்கால் இரத்தம் எப்படியாகும்?

சிலர் கிராமத்தில்பரம்பரை வைத்தியர் என்ற பேரில்இருப்பார்கள். இதற்காகவே ஒரு கம்பி வளையம் வைத்திருப்பார்கள். பலருக் குப்பார்வையே போகிற அளவுக்குச் செய்துவிடுவார்கள். அதனாற் தான்இவ்வளவு தூரம்சொல்ல வேண்டியிருக்கிறது.

தென்கச்சி
**கோ. சுவாமிநாதன்.**

# விடைத்தாள் திருத்தும் பணி இன்று ஆரம்பம்

(ஏறாவூர்)

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணி இன்று நாடெங்கிலும் உள்ள 97 பாடசாலைகளில் ஆரம்பமாகவுள்ளன என்று பரீட்சைத்திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விடைத்தாள்கள் திருத்தும் பணியில் 35 ஆயிரம்ஆசிரியர்கள் ஈடுபடுவர். தமிழ் மொழி மூலமான விடைத்தாள்களை திருத்துவதற்கு15பேர்களைக் கொண்ட 450 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வடக்குக்கிழக்கில்மட்டக்களப்பு, கல்முனை, வவுனியா ஆகிய இடங்களில் இரு நிலையங்களிலும் திருமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் தலா 3 இடங்களிலுமாக 12 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (வ)

# மாணவர் நலன் கருதி வேலணையூடாக புதிய பேருந்து சேவைகள்

(ஊர்காவற்றுறை)

கடந்த முதலாம் திகதி தொடக்கம் மாணவர் நலன் கருதி வேலணையூடாக வட பிராந்திய போக்குவரத்து சபையினால் புதிய பேருந்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த 10 வருடங்களாக பொதுமக்கள் பாவனைக்குத் தடை செய்யப்பட்டிருந்த வேலணை சேர். வைத்தியலிங்கம் துரைச்சுவாமி வித்தியாலய முன் வீதியூடாக இச் சேவை இடம்பெற்று வருகிறது.

காலை 7.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் பேருந்து வங்களாவடி சந்தியூடாக பிரதான வீதியால் புளியங்கூடல் சந்தி சென்று ஊர்காவற்றுறையை சென்றடைந்து.

பின் பி.ப 2.15 மணிக்கு ஊர்காவற்றுறையில் இருந்து புறப்பட்டு புளியங்கூடல் சந்தி யூடாக பிரதான வீதியால் வங்களாவடி சந்தியை அடைந்து மீண்டும் யாழ்ப்பாணம் திரும்புகிறது.

மாணவர் மற்றும் ஆசிரியர் நலனைக் கருத்திற் கொண்டு இச்சேவை ஆரம்பிக்கப்பட்ட போதிலும் வேறு பொதுமக்கள் பலரும் இச் சேவையினால் பெரிதும் நன்மையடைந்து வருகின்றனர். (உ-75)

# ஆய்வுத்துறையாக மாறவேண்டிய கட்டத்தில் சித்த மருத்துவத்துறை

## பேராசிரியர் அ.சண்முகதாஸ் தெரிவிப்பு

(அரியாலை)

ஆய்வுத்துறையாக மாற வேண்டிய கட்டத்தில் சித்த மருந்துவத்துறை மாறி வருகின்ற இவ் வேளையில், மேலும் இத்துறையை நவீனமயப்படுத்தவேண்டியதேவை எழுந்துள்ளது.

இவ் வேளையில், பல்கலைக் கழகம் மற்றும் அரச உதவியுடன், யாழ்ப்பாணத்தில் மூலிகைத் தோட்டம் ஒன்று அமைக்க வேண்டிய அவசியம் கல்விச் சமூகத்துக்கு ஏற்பட்டுள்ளது.

சித்த மருத்துவ வளர்ச்சிக் கழகத்தின் ஏற்பாட்டில் டாக்டர் கே. சிவசண்முகராஜா எழுதிய ''இருபதாம் நூற்றாண்டில் ஈழத்துச் சித்த மருத்துவம், கட்டு வைத்தியம்'' நூல்கள் அறிமுக விழா அண்மையில் யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது.

உடுவில் கல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் அ. தற்பரானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்பு ஆய்வுகள் பீட பீடாதிபதி பேராசிரியர் அ சண்முகதாஸ் தனது உரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரை யாற்றுகையில்,

நீண்ட காலமாக எமது கிராமங்களில் பயிலப்பட்டு வந்த சித்தமருத்துவம் யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பாக அறிமுகப்படுத்தப் பட்டபின்னர், அங்கு கற்ற ஒருவர் இரண்டு காத்திரமான நூல்களை யாத்திருப்பது இதுவே முதல்தடவை என்று குறிப்பிட்டார்.

இவ் விழாவில், சிறப்புரையாற்றி தென்னிந்திய திருச் சபைப் பேராயர் அருட்திரு கலாநிதி ஜெபநேசன் தனது உரையில்,

நூல் வெளியீடுகள்கல்விசம்பந்தமான ஆய்வுகளுக்கு வழி வகுக்கும் உன்னத படைப்புக்களை வெளியிடவேண்டும்.

இலங்கையில் சித்த மருத்துவம் சம்பந்தமான நூல்கள் மிகமிகக் குறைவு.

அர்ப்பணிப்பு மிக்க இந் நூலாசிரியர் தனது வெளியீடுகள் மூலம் தூங்கிக் கொண்டிருக்கும் சித்த மருத்துவத்தை கட்டியெழுப்புவார் என்றநம்பிக்கைஇருக்கிறது எனக்கு என்றார். (உ-106)

# பாதிக்கப்பட்ட நெற்செய்கையாளருக்கு நட்டஈடு கிடைக்குமா?

(ஊர்காவற்றுறை)

யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தினால் நெற்செய்கை தொடர்பான தரவுகள் திரட்டப்பட்டு வருகின்றன.

பெரும்போக நெற்செய்கையின் போது மழையின்மை காரணமாக அழிவடைந்த நெற்செய்கை நிலங்களின் பரப்பளவு மொத்தமாக பயிரிடப்பட்ட நெற்செய்கை நிலங்களின் அளவு தொடர்பான கணிப்பீடுகளே. யாழ். மாவட்டத்திலுள்ள கமநல சேவைகள் நிலையங்களினால் விவசாய சம்மேளனங்கள் ஊடாக திரட்டப்பட்டு வருகிறது.

இருப்பினும், கணிப்பீடுகள் நடந்தாலும், தமக்கு ஏற்பட்ட அழிவுகளுக்கு ஏற்ற நட்டஈடு வழங்கப்படுமா என்பதில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் சந்தேகம் எழுப்பியுள்ளனர். (உ-75)

# சேதமடைந்த நலன்புரி நிலையத்தை திருத்த நடவடிக்கை

## வவுனியா அரச அதிபர் தெரிவிப்பு

(வவுனியா)

அண்மையில் ஏற்பட்ட பெருமழை, மற்றும் காற்று காரணமாக சேதமடைந்த வவுனியா நலன்புரி நிலையங்களைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் கே. கணேஸ் தெரிவித்துள்ளார்.

இதற்குத் தேவையான நிதி அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடமிருந்து பெறப்பட உள்ளதாகவும், இவற்றைத் திருத்தியமைக்க ஐக்கிய நாடுகள் அகதிகள் நிறுவனம் உறுதியளித்திருப்பதாகவும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேசமயம், மேற்படி மழையினால் மரங்கள் முறிந்து வீழ்ந்த காரணத்தினால் வவுனியா மின்சார சபைக்கு சுமார் 3 இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-59)

### உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி, டிசெம்பர் 30 ஆம் திகதி தொடக்கம் உரும்பிராய் உதய சூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இம்மாதம் 7 ஆம் திகதி நடைபெறவுள்ள இதன் அரையிறுதி ஆட்டத்தில் ஊரெழு நோயில் விளையாட்டுக் கழகம், யா/ சிற்றி ஸ்ரார் விளையாட்டுக் கழகம், நாவாந்துறை சென்நீக்ளஸ் விளையாட்டுக்கழகம், மயிலங்காடு ஞானகலா விளையாட்டுக் கழகம் ஆகியன மோத விருக்கின்றன. (உ)

# செயலாளர் நியமனம்

(கொழும்பு)

சுற்றுலாமற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளராககலாநிதிரி பி. இராமானுஜம்ஜனாதிபதியால்நியமிக்கப்பட்டுள்ளாரென்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இவர்கால்நடை அபிவிருத்தி மற்றும் தோட்டஉட்கட்டமைப்பு அமைச்சுஆகியவற்றின் செயலாளராககடந்த நான்குஆண்டுகள் பணிபுரிந்துள்ளார் என்பதுக் குறிப்பிடத்தக்கது. (ந-4)

# மட்டுமாவட்ட நீதிபதியாக ரி. சொர்ணராஜ்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட நீதிபதியாக ரி. சொர்ணராஜ் இன்று பதவி ஏற்கிறார்

கடந்த 5 வருடங்களுக்கு மேலாக மட்டக்களப்பு மாவட்ட நீதிபதியாக கடமையாற்றிய ஜே. விஸ்வநாதன் திருமலை மாவட்ட நீதிபதியாக இம்மாதம் 1 ஆம் திகதி கடமை ஏற்றுள்ளதையடுத்தே மட்டக்களப்பு மாவட்ட நீதிபதியாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (ச)

# யாழ் மாநகர எல்லைக்குட்பட்ட குடிநீர் விநியோகத் திட்டம் வெற்றிகரமாக பூர்த்தியானது

## ஜீ.ரி.சற் வட்டாரங்கள் தகவல்

(ஈச்சமோட்டை)

யாழ். மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கான குடிநீர் வழங்கும் திட்டம் வெற்றிகரமாக பூர்த்தியடைந்திருப்பதாக ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன (ஜீ ரி சற்) வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி நிறுவனம் ஒரு கோடி ரூபா செலவில் யாழ் மாநகர சபைக்கு உட்பட்ட மக்கள் குடியிருப்பு பிரதேசங்களில் ஒழுங்கைகளிலும் வீதிகளிலும் நீர் வழங்கும நிலையங்களை அமைத்து காலையும் மாலையும் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கி வருகிறது.

அத்துடன் மேற்படி பிரதேசங்களில் மழை காலங்களில் தேங்கும் கழிவு நீரை அகற்றுவதற்கும் ஒரு கோடி ரூபா செலவில் யா/ மாநகர சபையுடன் இணைந்து திட்டம் ஒன்றை தயாரித்துள்ளது

இதேசமயம், அமுல்ப்படுத்தப்பட்டுள்ள குடிநீர் திட்டத்தினை துஷ்பிரயோகம் செய்யாது பயனுள்ள வகையில் பயன்படுத்துமாறும் ஜீ.ரி.சற் நிறுவன வட்டாரங்கள் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-59)

## பிலிப்பைன்ஸ் அதிபர் மீதான விசாரணையைத் துரிதப்படுத்தவும்

[மணிலா]

பிலிப்பைன்ஸ் அதிபர் எஸ்ராடா மீதான வழக்கு விசாரணையை விரைவாக நடத்தி முடிக்கும்படி நீதிபதிகளுக்குப் பணிக்கப்பட்டுள்ளது.

அதிபரின் விசாரணை பல வாரங்களாக நீண்டுகொண்டு போவதாகவும் அவரின் ஆட்சி நிர்வாகத்துக்கு இதுமிகஇடையூறாக அமைகிறதென்றும் இதனால் நாட்டின் பந்தோபஸ்துக்கு பெரும் குந்தகம் ஏற்படுமென்றும் பாதுகாப்பு அமைச்சர்தெரிவித்தார்.

இதேவேளை நத்தார் தினத்தை அண்டியகாலங்களில் குண்டுகள் வெடித்தமை மற்றும் ஊர்வலங்கள் நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது. [து]

## வலதுபக்க சாரதி ஆசனம்உள்ள கார்களுக்கு கம்போடியாவில் தடை

(நொம்பேர்)

வலதுபக்க சாரதி ஆசனம் உள்ள கார்களைகம்போடியா அரசு தடைசெய்துள்ளது.

நேற்று முன்தினம் தொடக்கம் இந்த தடையுத்தரவு அமுலிற்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு முற்பகுதியில் வலது கரை ஓட்டத்தை இடது கரை ஓட்டமாக மாற்றும்படி அரசு அறிவித்திருந்தது.

அரசு அறிவித்து ஒரு வருடமாகியும் கூட சாரதி ஆசனத்தை இடது பக்கமாக மாற்றாத இருபதினாயிரம் கார்கள் தடைசெய்யப்பட்டதுடன் சாரதி ஆசனத்தை மாற்றும் முயற்சிகளும் மேற்கொளளப்பட்டன.

இதேவேளை கார்சொந்தக்காரர்கள் மாற்றியமைக்கும் திட்டத்திற்கு கூடுதல் செலவாகுமென்று கருத்துத்தெரிவித்துள்ளனர். (து)

## காஷ்மீர் விடயமாக பாகிஸ்தானுடன் பேசுவதற்கு இந்தியா என்றுமே தயார்

### பிரதமர் வாஜ்பாய் தெரிவிப்பு

[புதுடில்லி]

காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக பாகிஸ்தானுடன் பேச்சு நடத்த இந்தியா தயார் என்று அறிவித்துள்ளது.

பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் மேலும் இது தொடர்பாகக் குறிப்பிடுகையில்; எமது அரசு இதுதொடர்பாக காஷ்மீரிலுள்ள குழுக்களுடன் பேச இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் நீண்ட காலப்பிரச்சினையாக இருந்து வரும் இப்பிரச்சினைக்கு புதிய தீர்வைக் காண இந்தியா ஆயத்தமாக இருக்கிறது என்றும் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்தார்.

பாகிஸ்தானுடன் எந்த நிலையிலும் பேச்சு வார்த்தை நடத்தத்தயார் என்றும் எதற்கும் பாகிஸ்தானின் உகந்த சூழலை உருவாக்கித்தர வேண்டும் என்றும் பாகிஸ்தான் சந்தேகத்துக்கிடமில்லாமல் நடந்து கொள்வதுடன் இதய சுத்தியுடன்பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும் என்று பிரதமர் கேட்டுக்கொண்டார். [து]

## இந்திய-பாக். ஒப்பந்தம் கைச்சாத்து அணுத்தகவல்களுர்பரிமாறப்பட்டன

(புதுடில்லி)

இந்தியாவும் பாகிஸ்தானும் புதுவருடத்தன்று அணு சக்தித் தகவல்களை பரிமாறிக் கொண்டன என்று அறிவிக்கப்படுகிறது.

1998 ஆம் ஆண்டுதொடக்கம் மேற்படி இரு நாடுகளும் அணு ஆயுதம், தளங்கள் மற்றும் இது தொடர்பான தகவல்களையும் பரிமாறிக் கொள்கின்றன.

இந்தியாவும் பாகிஸ்தானும் அணுக் குண்டு சோதனைகளை அடுத்தடுத்து நடத்தியதும் பல வல்லரசுகளினது அயல் நாடுகளினதும் கண்டனத்துக்கும் வெறுப்புக்கும் உள்ளானதால் இரு நாடுகளும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன. அதில் முக்கியவிடயம் ஒரு நாடு மற்ற நாட்டின் அணுநிலையங்களைத்தாக்குவதில்லையென்றும்ஒவ்வொரு ஆண்டும் முதலாந்திகதியும் அணுநிலையங்கள் தொடர்பான சகல ஆவணங்களையும் பரிமாற்றிக் கொள்வதென்றும் உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளது. (து)

## சீனா மீது விதிக்கப்பட்ட தடையை தாய்வான் அரசு நீக்கியது

### நல்லெண்ண சமிக்ஞையாம்

(தைப்பீ)

தாய்வான் சீனாமீது விதித்திருந்த தடைகளை நீக்கிவிட்டதாக தாய்வான் செய்திகள் தெரிவிக்கின்றன.

புதுவருட சமிக்ஞையாக இந்த தடைநீக்கம் அமைந்துள்ளதென்றும், இரு படகுகளில் சீனாவிற்கு நூற்றுக்கணக்கானோர் செல்ல இருந்ததாகவும் காலநிலை காரணமாக ஒருபடகு மக்களே அங்கு சென்றார்களென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் தாய்வானின் மாசோதீவிலிந்து பௌத்த பிக்குகள் அடங்கிய குழுவினர் சீனாவின் பூஷாநகருக்குச் சென்றுள்ளனரென்றும் சீன மக்கள் நல்லவரவேற்புக் கொடுத்தார்களென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டொரு தினங்களில் உயர் அதிகாரிகளடங்கிய படகு ஒன்று தாய்வானிலிருந்து சீனாவிற்குச் செல்ல இருப்பதாகவும் தாய்வான் வானொலி தெரிவித்தது.

தாய்வானில் புதிய தேதலில் புதிய அரசு அமைந்தபின் இரு நாடுகளின் உறவில் விரிசல் ஏற்பட்டிருந்தது தெரிந்ததே.

தாய்வான் மதகுருமார்களின் சீன விஜயத்தை சீன அரசு பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லையென்றும் சீனா முழுமையான பரந்துபட்ட தொடர்பு உறவையே விரும்புவதாகவும் சீன அரசு தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (து)

## அந்தாட்டிக் பகுதிகளுக்கு இந்திய ஆய்வுக் கழகம் நேரடி விஜயம்

(கேப்டவுன்)

இந்திய உலக ஆய்வுக் கழகம் தென் ஆபிரிக்க கேப்டவுனிலிருந்து அந்தாட்டிக் பகுதிகளுக்குச் சென்றுள்ளது.

ஐம்பத்து நான்கு பேரைக் சொண்ட ஆய்வாளர்களை டாக்டர் பி.ஜி. பாண்டே வழி அனுப்பி வைத்தார்.

உறைபனிக்கட்டிகளைப் பற்றிய ஆய்வுகளை குறோம் டோர்சருவிமூலம்ஆராய்வார்கள்.

அந்தாட்டிப் பகுதிகளுக்கு பல நாட்டு ஆய்வாளர்கள் குறிப்பிட்ட காலங்களில் சென்று ஆய்வினை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (து)

## நெதர்லாந்து சிற்றுண்டிச்சாலையில் தீவிபத்து எட்டுப் பேர் பலி; 130 பேர் காயம்

(ஆம்ஸ்ரடாம்)

நெதர்லாந்து சிற்றுண்டிச் சாலையொன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் எட்டுப்பேர்மாண்டனர் நூற்றிமுப்பது பேருக்கு காயம் ஏற்பட்டது.

ஒரு சிறிய கதவொன்று மட்டும் திறந்திருந்த இந்தச் சிற்றுண்டிச் சாலையில் திடீரென ஏற்பட்ட தீவிபத்தில் மேற்படி அனர்த்தங்கள் ஏற்பட்டன.

தீப்பிடித்ததும் மக்கள் வெளியே வரமுடியாது திணறியதாகவும் இறந்தவர்கள் தொகை இன்னும் கூடுதலாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது

இத் தீவிபத்திற்குரிய காரணம் குறித்து தகவல் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை. (து)

உலக தரிசனம்

## ஆலயப் புனருத்தாரணம்

(மல்லாகம்)

அளவெட்டி தெற்கு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் நிர்வாகத்தினரின் மேற்பார்வையில்புனருத்தாரணம் செய்யப்பட்டு வருகிறது. (உ-ப-14)

## பாகிஸ்தானில் உள்ளூராட்சித் தேர்தல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடை பெற்றன. மக்களுக்கு ஜனநாயக உரிமைகள் வழங்கும் நோக்குடன் இத்தேர்தல் இடம் பெற்றது.

இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப் கடந்த ஆண்டு தெரிவித்ததற்கு அமைய தேர்தல் இடம் பெற்றுள்ளதென்றும் தெரிவிக்கப்படுகிறது.

படிப்படியாக இராணுவ ஆட்சியிலிருந்து ஜனநாயக ஆட்சி முறைக்கு வருவதற்கமைய இத்தேர்தல் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து)

## மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தி

(சுண்டுக்குளி)

யாழ். கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட புதிய மத்தியஸ்தர்களைச் சங்கத்தில் இணைத்துக்கொள்வதற்கான பரீட்சையில் 18 பேர் சித்தியடைந்துள்ளனர்.

ஆர். வரதன் (கட்டுடை), ஆர். கபிலன் (கட்டுடை), எஸ். சஞ்செயன் (திருநெல்வேலி), கே. கோகுலன் (நல்லூர்), சி. ஐ. சிதரன் (கொக்குவில்), ஏ. ஜே. ஜேக்கப் (சுண்டுக்குளி), கே. செல்வராஜா (நல்லூர்), எல். பிறேம்குமார் (கந்தர்மடம்), பி. பார்த்தீபன் (சுன்னாகம்), கே. சீராளன் (இணுவில்), எம். எஸ். சத்தியமூர்த்தி (அரியாலை), எம். கோணேஸ் (சுழிபுரம்), எம். குமரரூபன் (சுன்னாகம்), பா. முகுந்தன் (கரவெட்டி), எம். மயூரன் (சுன்னாகம்), ரி. குகன், எம். மதியழகன் (கரவெட்டி), எஸ். மோகனராஜ் (யாழ்ப்பாணம்) ஆகியோரே சித்தியடைந்துள்ளதாக கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம் தெரிவித்துள்ளது. (ச-110)

## சுவர்க்கவாயில் ஏகாதசி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் சுவர்க்க வாயில் ஏகாதசி உற்சவம், 6 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை தொடங்கப் பெற்று மறுநாள் துவாதசி உற்சவத்துடன் நிறைவு பெறும்.

இதனையொட்டி விஷேட கலை நிகழ்ச்சிகளும் சமயச் சொற்பொழிவுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ)

## இஸ்ரேல்-பலஸ்தீன பேச்சுக்கு அமெரிக்கா அழைப்பு விடவேண்டும்

### எகிப்திய அதிபர் தூண்டுதல்

(கெய்ரோ)

இஸ்ரேலையும் பலஸ்தீனத்தையும் உடனடியாக உச்சக் கட்டப் பேச்சுக்கு அழைக்குமாறு எகிப்திய அதிபர் ஹுஸ்னி முபாரக் அமெரிக்க அதிபர் பில் கிளின்டனை கேட்டுக்கொண்டார்.

நேற்று முன்தினம் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டஎகிப்திய அதிபர் இந்த அவசர வேண்டுகோளை ஜனாதிபதி பில் கிளின்டனிடம் விடுத்தார்.

இம்மாதம் இருபதாம்திகதி பதவிக் காலம் முடிவதற்கிடையில் இரு நாட்டுப் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கும்படி எகிப்திய அதிபர் கிளின்டனைக் கேட்டுக் கொண்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் முத்தரப்புப் பேச்சுவார்த்தைகள்மூலம்இதனைத் தீர்த்து வைக்கும்படியும் இரு நாடுகளுடனும் இது விடயம் தொடர்பாக தொடர்பு கொண்டு ஏற்பாடுகளைச் செய்யுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

இதே வேளை எகிப்திய அதிபருடன் பலஸ்தீன அதிபர் ஜாசீர்அரபாத் உரையாடி சில மணித்தியாலங்களுக்குள் அமெரிக்க அதிபருடன் தொடர்பு கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## வனவளத்தில் வளர்ச்சி

(யாழ்ப்பாணம்)

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுமிடத்து அம்பாறை மாவட்டமே வனவளத்துறையில் பாரிய வளர்ச்சியைக் கண்டுள்ளதாக வனவளத்துறை அறிக்கைகள் சுட்டிக்காட்டியுள்ளன. [உ]

## வீதி திருத்தம்

[இணுவில்]

தாவடி வடக்கு வன்னியசிங்கம்வீதிதிருத்தவேலைகள் தற்போது ஆரம்பமாகிநடைபெற்று வருகின்றன. (உ-49)

தாமின் புறுவது உலகின் புறங்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்

வலம்புரி

## இலவசப் பாட புத்தகம்

2001ம் ஆண்டிற்கான முதலாந்தவணை நேற்று ஆரம்பமாகியது. புது வகுப்புகளில் மாணவர்கள் மகிழ்வுடன் சஞ்சரிக்கும் காலம் இது. புதுப் புத்தகம், புதிய கொப்பிகள்என்று தமது புதுவகுப்புக்களை ஆரம்பிக்கும் போது அந்தப் பிஞ்சுள்ளங்களில் கல்வி கற்பதற்கான ஆக்கம் - ஊக்கம் உந்தப்படுகிறது. ஆனால் இந் நிலைமை வடபுலத்து மாணவர்களைப் பொறுத்தவரை கிட்டாத ஒன்றாகவே இருக்கிறது. அதற்குக் காரணம் இலவசப் பாடப்புத்தகங்களை ஒழுங்காக வடபுலத்திற்கு அனுப்பி வைக்கப்படாமையாகும்.

கடந்த 2000ம் ஆண்டில் பாடப் புத்தகம் கைக்குக் கிடைக்காமலே கல்வி கற்று முடித்த மாணவர்கள் அநேகர். ஏதோ சாத்திரப்படிக்கு இரண்டொரு பாடப்புத்தகங்களை வைத்துக் கொண்டு ஆசிரியர்கள் தங்களால் இயன்றதை செய்து முடித்தார்கள். பாடப்புத்தகங்கள்கிடைக்காமையால் மாணவர்களின் சுலபமான கற்றலுக்கு - வாசிப்பிற்கு தடை ஏற்பட்டது. இதனால் ஏழை மாணவர்களும் பெரும் பாதிப்படைந்தனர்.

இது ஒரு புறமிருக்க கடந்த கால அனுபவங்கள் நமக்குப் பாடமாக அமைந்த போதிலும், இவ்வாண்டும் புதிய வகுப்புகள் ஆரம்பமாகும்போது மாணவர்களின் கையில் பாடப் புத்தகங்களை ஒப்படைக்க முடியாது போனமை வேதனைக்குரியது.

யாழ்ப்பாணத்திற்கு மதுபானம்கப்பல்கப்பலாகவர முடியுமென்றால், சிகரெட் வகைகள் கோடிக்கணக்காக கொண்டுவர இயலுமென்றால், மாணவர்களின் கல்விக்கு அத்தியாவசியமான பாடநூல்களை எடுத்து வர முடியாதது ஏன்? இதற்குத் தடையாக இருக்கும் தடைக்கல்பற்றி பொறுப்பானவர்கள் விலாவாரியாகத் துணிந்து கூறுவது காலத்தின் கட்டாய தேவையாகும்.

பாடப் புத்தகங்களின் தாமதம் காரணமாக புதிய புதிய வெளியீட்டாளர்கள் - வியாபாரிகள் ஒன்று இரண்டு இலவசப் பாடப்புத்தகத்தை வைத்துக்கொண்டு ஏழைகளிடம் - மாணவக் குழந்தைகளிடம் பணம் பறிக்கும் மாபாவத்தை செய்யத் துணிந்து விட்டனர். எனவே இதையெல்லாம தடுப்பதாயின் விரைந்து இலவச நூல்களை தருவிப்பதே ஒரே வழியாகும்.

# இலங்கையில் வேகமாகப்பரவும் டெங்குக்காய்ச்சல்

# சாவின் விளிம்பிற்கு மனிதனை அழைக்குமா?

## தடுப்பு நடவடிக்கையில் மருத்துவ இயக்கம் முனைப்பு

(நேற்றைய தொடர்ச்சி)

**ஈடிஸ் (Aedes) நுளம்பு**

1) இவை சிறிய கடும் நிறமுடைய நுளம்புகளாகும்.
2) இவற்றின் உடலிலும், கால்களிலும் வெள்ளை நிறமுடைய புள்ளிகள் காணப்படும் இவ்வியல்பைக் கொண்டு இந்த நுளம்பை இலகுவில் அடையாளம் காணலாம்.
3) இவை பகல் வேளைகளிலேயே மனிதனைக் கடிக்கும்.
4) இது தற்காலிகமாக நீர் தேங்கியுள்ள இடங்களில் அதிகளவு பெருகும்.
5) இது 2 கி. மீ. தூரம் மட்டுமே பறக்கக்கூடியது.

பெண் ஈடிஸ் (Aedes) நிறைவுடலி நுளம்பு வீட்டுச்சுற்றுப்புறச் சூழல், பாடசாலைச் சுற்றாடல் மற்றும் பல்வேறு நீர் தேங்கியுள்ள இடங்களில் முட்டைகள் இடும். இம்முட்டைகள்ஏறத்தாழ 2 நாட்களில் பொரித்து குடம்பிகளை உருவாக்கும். இக்குடம்பிகள் அதே நீரில் ஏறத்தாழ 7 நாட்களில் கூட்டுப் புழுவாக உருமாற்றம் அடையும். இவை பின்னர் ஏறத்தாழ 2 நாட்களில் நிறைவுடலி நுளம்புகளாக மாறி நீரைவிட்டு வெளியேறி மனிதனைக் கடிக்க தயாராகும்.

**டெங்கு எவ்வாறு கடத்தப்படுகிறது.**

டெங்கு காய்ச்சல், டெங்கு வைரஸினால் தொற்றுதல் அடைந்த பெண் ஈடிஸ்நுளம்புகள், மனிதனைக் குற்றி, இரத்தத்தை உறிஞ்சும் பொழுது இவ்வைரஸை மனிதனின் உடலினுள் செலுத்துவதனால் உருவாகிறது. இம் மனிதனின் குருதியில் குறிப்பிட்ட காலம் வரை இவ்வைரஸ் காணப்படும். (நோய் தொடங்கி முதல் மூன்று நாட்கள்) இம் மனிதனை தொற்றுதலடையாத ஒரு நுளம்பு குற்றும்பொழுது வைரசுக்கள் மீண்டும் நுளம்பை அடைகின்றன. இவ்வாறு மனிதனுக்கும் நுளம்பிற்கும் இடையில் ஒரு சங்கிலித் தொடர்போல் டெங்கு வைரஸ் கடத்தப்படுகிறது.

## மருத்துவ விளக்கம்

**தடுப்பு முறைகள்**

1) ஈடிஸ் நுளம்புகள் பெருகுவதைத் தடுத்தல்.
2) நுளம்பு வசிக்கும் இடங்களை சுத்தம் செய்தல்.
3) நுளம்பு மனிதனைக் கடிப்பதை தடை செய்தல.

இவற்றுள் ஈடிஸ் நுளம்புகள் பெருகுவதை தடை செய்தலே மிகவும் பயனுள்ளதும், வெற்றிபளிக்கக் கூடியதுமான ஒரு முறையாகும்.

### சிவாஜினி கதிர்வேலாயுதபிள்ளை

(மருத்துவபீடம் 4 ம் வருடம் யாழ். பல்கலைக்கழகம்)

**தடுத்தல்**

வெற்றுப் போத்தல்கள், தேவையற்ற சாடிகள, சட்டி பானைகள் போன்றவற்றை நசுக்கி விடுதல். புதைத்தல் அல்லது நீர் தேங்காத இடங்களில் வைத்தல்.

சிரட்டைகள், பொச்சுமட்டைகள போன்றவற்றை கவிழ்த்து வைத்தல் அல்லது சிறிய துண்டுகளாக்கி வைத்தல்.

3) பூக்கள் வைக்கும் சாடிகள், எறும்புகளுக்கு வைக்கும் தண்ணீர்ப் பாத்திரங்கள் போன்றவற்றில் உப்பு சேர்த்தல், அடிக்கடி தண்ணீரை மாற்றுதல், டயர்களில் மண்ணை அடைத்தல் அல்லது சிறு துளைகளை ஏற்படுத்தி தண்ணீர் தேங்குவதைத் தடுத்தல், பொலித்தீன் பைகள், பிளாஸ்ரிக் பைகளை வீட்டிற்கு வெளியே எறிவதைத் தடுத்தல், மரக் குற்றிகளில் நீர் சேர்வதைத் தடுத்தல், நீர் தேக்கிவைக்கும் பெரிய தண்ணீர் தாங்கிகள், தொட்டிகள் முதலியவற்றை நுளம்பு புகாத வலைகளினால் மூடிவைத்தல் தேவையற்ற குப்பை கூளங்களைப் புதைத்து விடுதல். அல்லது எரித்து விடுதல், வீட்டுச் சூழலைச் சுத்தமாக வைத்திருத்தல், கால்வாய்கள், கானுகள், கூரையில் உள்ள பீலிகள் போன்றவற்றில் இலைகுழைகள் அடைப்பை ஏற்படுத்தினால் அவற்றை நீக்கி விடுதல், நுளம்பு குடம்பிகளை உண்ணக்கூடிய 'கப்பீஸ்' GuPPies மீன்களை நீர் தேங்கி உள்ள இடங்களில் வளர்த்தல், ஆடு, மாடுகளிற்கு நீர் வைக்கும் பாத்திரங்களில் உள்ள நீரை அடிக்கடி மாற்றிவிடுதல்.

**ஆ) நுளம்பு வசிக்கும் இடங்களைச் சுத்தம் செய்தல்**

ஈடிஸ் நுளம்பானது வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் காணப்படலாம்.

1) வீட்டிற்கு வெளியே புல், பூண்டுகள், தாவரங்களால் அமைக்கப்பட்ட வேலிகள் சடைத்து வளர்ந்திருக்கும் தாவரங்கள் காணப்படும் இடங்களில் இது அதிகம் ஓய்வு நிலையில் காணப்படும்.

2) வீட்டிற்கு உள்ளே கட்டிடங்கள், கதிரைகள், மேசைகளுக்குக் கீழே, ஆடைகள் அதிகம் ஒழுங்கற்றுக் காணப்படும் இடங்களில் மற்றும் சப்பாத்தினுள் ஓய்வு நிலையில் காணப்படலாம்.

எனவே இவற்றைச் சுத்தமாகவும், ஒழுங்காகவும் வைத்திருப்பதன் மூலம் 'ஈடிஸ்' நுளம்புகள் எமது சுற்றாடலில் காணப்படுவதை குறைக்கலாம்

**இ) நுளம்பு எம்மைக் குற்றுவதைத் தடைசெய்தல்**

அதிக நுளம்பு உள்ள பிரதேசங்களில வாழ்பவர்கள், நுளம்புத்திரி (Coil) மின்சாரத்தில் இயங்கும் Mat போன்றவற்றைப் பகல் வேளைகளில் பாவிக்கலாம். பகல் வேளைகளில் உறங்குபவர்கள் குழந்தைகள், சிறுவர்கள், முதியோர் நுளம்பு வலையைப் பாவிக்கலாம் கைகால்கள் போன்ற பகுதிகளிற்கு சித்திரனெல்லா எண்ணெய் அல்லது புல்லெண்ணெய் Citrorella பூசுதல், டெங்கு காய்ச்சல் ஏற்பட்ட நோயாளியை குறைந்தது முதல் 3 நாட்களிற்கும் நுளம்பு குற்றுவதில் இருந்து பாதுகாத்தல் வேண்டும். கைகால்களை மறைக்கக் கூடியவாறு ஆடைகள், சொக்ஸ் socks அணிதல் காலை 6 - 8 மணி மாலை 4 - 7 மணி நேரத்தில் வீட்டிற்கு வெளியே உலவுவதை தவிர்த்தல்.

**டெங்கு காய்ச்சல் பரவுவதை தடுப்பதில் மக்களின் பங்கு**

1) மேற்கூறப்பட்டுள்ள படி நுளம்பு பெருகுவதைத் தடுக்கும் முறைகளை மக்கள் முழு மனதுடன் மேற்கொள்ள வேண்டும்.
2) மக்கள் குழுக்களாக இணைந்து, பாடசாலை மாணவர்கள், பல்கலைக் கழக மாணவர்கள். ஆசிரியர்கள் எல்லோரும் ஒரு முகமாக டெங்கு காய்ச்சலை எதிர்க்க போராட வேண்டும்
3 சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருப்பதே இதன் அடிப்படையாகும்

(முற்றும்)

# தொடரும் அறிவியல் வளர்ச்சி

# இயற்கையின் சவால்களை தணிக்குமா?

இன்று உலகில் மிதமிஞ்சிக் காணப்படும் அறிவியல் பெருக்கம், தொழில்நுட்ப அபிவிருத்தி, விவசாய கடற்றொழில் விரிவாக்கம், அணுக் கண்டு பிடிப்புக்கள் யாவும் மனித குலத்தை அமைதியான, நிம்மதியான ஒரு நிலைக்கு இட்டுச் செல்கின்றதா என்பது ஆய்விற்குரிய ஒன்றாகவே காணப்படுகிறது.

இந் நிலையானது இயற்கையை, இயற்கையின் சவால்களை எதிர் கொள்ளக் கூடிய ஆற்றல்களை மனிதனுக்கு வழங்குமா என்பது பெரும் கேள்விக் குறியாகவே காணப்படுகிறது.

யுத்த அவலங்கள், நோய்களின் தாக்கம், ஆக்கிரமிப்பு உணர்வு மேலாதிக்க நிலை வல்லரசுக் கெடுபிடி போன்றவற்றிலிருந்து மனித இனம் மீளக் கூடிய வாய்ப்பு இல்லை என்பதே உலகில் நடக்கும் சம்பவங்கள் வலியுறுத்துகின்றன.

உலகின் எங்கோ ஒரு மூலையில் யுத்த பேரிகை முழங்குகிறது; பூமி அதிர்ச்சி நிகழ்கின்றது. புயல் காற்றுவெள்ள அபாயம் இவற்றுள் சிக்குண்டு சின்னா பின்னப்படும் மக்கள் எத்தனை பேர்.

இவற்றின் தாக்குதலிலிருந்து மனிதன் மீள முடியாதா, சமூகவியலாளர், மானிடவியலாளர் ஆகியோர் முன் இன்றுள்ள கேள்வி இதுவே.

### பி. ரி. றொபேட்சன்

[உரும்பிராய்]

ஆதியில் மனிதன் எவ்வகையான ஒரு வாழ்க்கையை வாழ்ந்து வந்தான் இன்று எவ்வாறு அவ் வாழ்க்கை மாற்றமடைந்து முன்னேறியுள்ளது. என்பதனை நோக்குதல் சாலவும் பொருத்தமே.

**ஆதியில் மனிதர்கள்**

ஆதியில் இயற்கையோடு இயற்கையாக தங்களை இணைத்து ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்து வாழ்ந்தவர்கள்தான் நமது முன்னைய வழித்தோன்றல்களான ஆதி மனிதர்கள். இவர்களது வழிபாட்டு விழுமியங்கள, வழிபாட்டு முறைகள், நடை உடைபாவனைகள், குலாதி சயங்கள், கலை அம்சங்கள், என்கின்ற அத்தனையுமே இயற்கையென்ற மகாபடைப்புக்குள் உள்ளடங்கலாகவே இருந்துவந்துள்ளன.

**பேதமற்ற வாழ்க்கை**

இது எவ்வாறாக இருப்பினும் இவர்கள் தங்கள் சமூக வாழ்க்கை முறையில் இன, மத, சாதிபேதமின்றி எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதும், இயற்கையின் ஒளிமுதலாகிய சூரியனை வழிபட்டு வந்தார்கள் என்பதும், சரித்திரங்கள் பற்றிக் கூறுகின்ற பல நூல்கள் வாயிலாகவும் அறியமுடிகிறது.

**பரிணாமவளர்ச்சியில்**

இவ்வாறான தன்மைகளை பெருத்தப்பாடாகக் கொண்டு வாழ்ந்த நமது முன்னோர்கள் தங்கள் உடலில் கட்டமைப்பில் மட்டுமல்லாது சிந்தனைசெய்யும் ஆற்றலிலும் வளர்ச்சியடைந்து காணப்பட்டனர் பின்பு சிந்தனையிலேற்பட்ட பாரியவளர்ச்சி இவர்களை சிந்திக்கத்தூண்டியது

இயற்கையின் மீது இவர்களது பார்வை உன்மையாகப் பட ஆரம்பித்தது பார்த்ததன் மூலம் அனுபவங்கள் பலவற்றையும் இவர்கள் பெற்றுக்கொண்டனர்

வெற்றுக் கண்களால் மட்டும் இயற்கை நிகழ்வுகளை இவர்கள் அவதானிக்கவில்லை அதற்கு மாறாக சிந்தனையிலும் அவற்றை உற்றுநோக்க ஆரம்பித்தனர்

இவர்களது இச்சிந்திக்கு மாற்றல் இவர்களை புதியதொரு பூதளத்தின் மீது கால்பதிக்க வைத்தது.

கண்களால் பார்த்தனவற்றையும், சிந்தனையின் மூலம் புரிந்து கொண்டவற்றையும்,

(2-ம் பக்கம் பார்க்க)

# நாவற்குழியில் 68 பேர் தங்கியுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ள நாவற்குழிப் பகுதியில் சுமார் 68 பொது மக்கள் தங்கியுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இவர்களுக்கான உணவுப் பொருட்களை அனுப்பிவைப்பதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு இராணுவத்தினர் அரச அதிபரைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க சாவகச்சேரி பிரதேசசெயலர், மற்றும் கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆகியோர் நேற்று அப்பகுதிக்குச் சென்று திரும்பியதாகத் தெரியவருகிறது. அத்துடன் இம் மக்களுக்குத் தேவையான உணவுப்பொருட்கள் நாளை நாவற்குழிக்கு எடுத்துச் செல்லப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

(வ-12-49)

# ஆரம்ப ஆசிரியர்களுக்கு வெளிநாடுகளில் பயிற்சிபெற புலமைப்பரிசில் வழங்கும் திட்டம்

(கோப்பாய்)

அரச ஆரம்ப பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வெளிநாடுகளில் குறுகிய கால புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு நிகழ்ச்சித்திட்டமொன்றை ஒழுங்குசெய்துள்ளதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாடசாலை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேம்படுத்தும் வகையில் இலங்கையிலுளள சகல அரச பாடசாலைகளிலும் தரம் 1 தரம் 2 இல் கற்பிக்கும் பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர்களிடமிருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி 45வயதுக்குட்பட்டவராகவும் பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியராக அல்லது அதற்குமேற்பட்டதகைமை உடையவராகவும் தற்போது தரம் 1 தரம் 2 இல் கற்பிப்பவராகவும் இருத்தல் வேண்டும்

அத்துடன், 5 வருடங்களுக்கு மேலாக ஆரம்பப் பிரிவில் கற்பித்தவராகவும், ஆகக்குறைந்தது 15 வருடங்கள் ஆசிரியர்சேவையை பூர்த்தி செய்தவராகவும் இருக்கவேண்டும்

ஆங்கில அறிவு மேலதிக தகமையாக கருதப்படும்.

இதற்கானவிண்ணப்பப் படிவங்களை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபருடாகப் பெற்று இம்மாதம் 12ம் திகதிக்கு முன்பாக, பணிப்பாளர் மனிதவளஅபிவிருத்தி பிரிவு கல்வி அமைச்சு இசுருபாய பத்தரமுல்ல என்ற விலாசத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுளளது.

(உ-79)

# கொழும்பு டாக்டருக்கும் டெங்குக் காய்ச்சல்!

கொழும்பு தேசிய வைத்திய சாலையில் கடமையாற்றும டாக்டர் ஒருவரும் ''டெங்கு'' காய்ச்சல் ஏற்பட்டதினால் அவர் அவ் வைத்திய சாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக வைத்திய சாலையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட டாக்டர் ஸ்ரீஜெயவர்த்தனபுரப் பகுதியில் வசித்து வந்தார் எனவும் இப்பகுதியில் மேலும் புலர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டிருப்பதாகவும் வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வ)

## மாணவன் காயம்

(வவுனியா)

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இரு மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் மாணவர் ஒருவன் காயமுற்று கண்டிவைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இம்மோதல் பல்கலைக்கழக வளாகத்தில் இடம் பெற்றதாகவும், காயமுற்றவர் போத்தல் ஒன்றினால் தாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாகப் பேராதனைப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ந-5)

## 15ல் மீண்டும் ஆரம்பம்

(வவுனியா)

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பகிடிவதைச் சம்பவம் ஒன்றை அடுத்து மூடப்பட்டிருந்த கலைப்பீடம இம் மாதம் 15ஆம் திகதி மீண்டும் திறக்கப்படவுள்ளதென்று உபவேந்தர் பேராசிரியர் கபிலகுணதிலக தெரிவித்துள்ளார். (ந-4)

## போதைவஸ்து கடத்தியவர் கைது

(கொழும்பு)

மதுரையிலிருந்து கட்டுநாயக்கா விமானத்தளத்தினூடாக இலங்கைகு போதைவஸ்தை கடத்தி வந்த ஒருவர் நேற்று கட்டுநாயக்கா விமானத்தளத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுப் பி.ப 2.20 மணியளவில் விமானத்தளத்தல் வைத்து இவரின் பயணப்பை சோதனைக்கு உள்ளாக்கப் பட்டவேளை அதிலிருந்து 200 கிராமுக்கும் அதிகமான ''ரோங்குகர்' ஹெரோஜின் போதைப்பொருள் கைபபற்றப்பட்டுள்ளது. இவர் இதற்கு முன்னரும் இலங்கைக்கு இரு தடவைகள் போதைப் பொருள் கடத்தியவர் என்பதும் தெரியவந்துள்ளது. (ந-4)

## 1570 அகதிகள் தமிழகம் சென்றனர்

(இராமேஸ்வரம்)

கடந்த வருடம் 2000 ஆம் ஆண்டு இலங்கையில் இருந்து 1570 தமிழர்கள் அகதிகளாக தமிழ் நாட்டிற்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

இவர்கள் பல நெருக்கடிகளின் மத்தியிலும், ஆபத்துக்களை எதிர்நோக்கியும், பெருந்தொகையான பணத்தைச் செலுத்தியுமே தமிழகம் சென்றுள்ளனர்.

இவர்களில் பெண்களும், குழந்தைகளுமே அதிகம் என்பதும் குறிப்பிடத்தகது.(வ)

### வாக்குறுதிகளை..

குறுதிகளை பொது ஜன ஐக்கிய முன்னணி நிறைவேற்றத் தவறி விட்டது. எனவே ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவி விலக வேண்டும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் ஜனநாயகரீதியாக நடைபெற்ற ஒரு தேர்தல் அல்ல இத்தேர்தல் மூலம் பொது ஜன ஐக்கிய முன்னணி மக்களின் உண்மையான ஆணையைப் பெற்றுக் கொள்ளவில்லை. என்று அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-5)

### ஜனாதிபதி---

மன்றத் தேர்தல்கள் தொடர்பாகவும் மேல் மாகாண சபை முதல்வர் தெரிவில் உள்ள இழுபறி நிலை தொடர்பாகவுமே ஆராயப் பட்டதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவரும், அமைச்சருமான அலவிமௌலானா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி நாடுதிரும்பியதும யுத்தநிறுத்தம் தொடர்பாக ஜனாதிபதி கட்சித் தலைவர்களையும், அமைச்சர்களையும அழைத்து ஆராய்ந்து முடிவெடுப்பார் என எதிர்பார்க்கப் பட்டபோதும் அது நடைபெறாமையினால் அரசியல் அவதானிகள் மத்தியில் ஐயப்பாடு தோன்றியுளளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இன்று கூடவுள்ள அமைச்சரவைக் கூட்டமும் ஜனாதிபதி தலைமையில் நடைபெறவிருப்பதனால் இந்த அமைச்சரவைக் கூட்டத்திலும் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பு தொடர்பாக ஜனாதிபதி ஆராய்வாரா என்பது சந்தேகத்திற்கு இடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### அரசின்

புக்கு அரசினால்மேற் கொள்ளப்பட்ட பயங்கரமான இராணுவத் தாக்குதல்களை வெளியுலகிற்கு அம்பலப்படுத்தும் நோக்கிலும் வெளிநாட்டுதூதுவர்களுக்கு விளக்கும் நோக்கிலும் இப்பத்திரிகையாளர் 'மாநாடுநடத்தப் படுவதாக ரெலோ அமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார். [வ]

### பாவனைக்கு

பாவனைக்குதவாத ஆயுதங்களைக் கொள்வனவு செய்து வருவதினால் இராணுவத்தினரே பாதிப்படைந்து வருகிறார்கள். இது குறித்து விசாரித்து உரியவர்களுக்குத் தண்டனை வழங்கவேண்டும் என்றும் கூறியுள்ளார். (வ)

AIL 2003
(கலை வர்த்தகப் பிரிவுகள்)
ஜனவரி - 06
காலை 8.00 மணி
DMI
யாழ் நகர்
(1996)

## நோயாளர் கப்பல் சேவையில்

[கொழும்பு]

திருகோணமலையில்இருந்து ஒருதொகுதி நோயாளர்களுடனும் மருந்துப்பொருட்களுடனும் செஞ்சிலுவைச் சங்க நோயாளர்கப்பல்யாழ்ப்பாணம் நோக்கி நேற்று புறப்பட்டுள்ளதாக செஞ்சிலுவைச்சங்க திருமலை மாவட்டசமூகஇணைப்பாளர் புஸ்பராஜன் தெரிவித்துள்ளார்.

கடற்கொந்தளிப்பு சீரற்ற காலநிலை காரணமாக கடந்த ஒன்றரைமாதமாக இடம்பெறாதிருந்த மேற்படி கப்பல் சேவைநேற்று ஆரம்பமாகியுள்ளமை இங்குகுறிப்பிடத்தக்கதாகும். (இ)

### ராணுவ

இது தொடர்பாக நீதவான் தெரிவிக்கையில் குறித்த சம்பவம்பாரிய குற்றங்களை புரியப்பட்டதற்கான ஆதாரங்கள் காணப்படுவதால் அது தொடர்பில் குற்றவியல் நடவடிக்கைக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதுடன் தொடர் நடவடிக்கை எடுக்குமாறு கொடிகாமம் பொலிஸாருக்கு நீதிவான் பத்துணிள்ளார்.

(ம-23)

### வவுனியா...

னத்துக்காக சைக்கிளில் இறம்பைக்குளம் அரைகரை வீதியில் உளள வீட்டுக்குச் சென்றபோது இச் சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

இறந்தவரது சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைத்து பதில் நீதவான் எஸ்.புண்ணியமூர்த்தியினால் மரணவிசாரணைமேற்கொள்ளப்பட்டதுடன் லொறிச் சாரதியைக் கைது செய்யுமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (வ)

## வெளிநாட்டு அச்சுறுத்தலை கடற்படை எதிர்கொள்ளும்

புதிய கடற்படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

அதிகளவு யுத்தக் கப்பல்கள், ஆயுத தளபாடங்கள் மற்றும் ஆளணிவளம் இருக்கின்ற போதும், கடற்படையினருக்கு போதிய பயிற்சி இன்மை படையமைப்பில் காணப்படும் பெரும் குறைபாடகவுள்ளது.

இவ்வாறு கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சந்தகிரி தெரிவித்துள்ளார்.

அண்மையில் கடற்படைத் தளபதியாக அவர் பதவியேற்றதையடுத்து,நேற்றுகொழும்பில் நடத்திய பத்திரிகையாளர்மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது;

கடற்படையினருக்குசிறந்த பயிற்சி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து, எதிர்காலத்தில் சிறந்ததொரு படையமைப்பாக கடற்படையை வளர்ச்சியடையச் செய்வது தமது இலக்கு என்று தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் ஓய்வுக்கு வந்தாலும் எதிர்காலத்தில் இலங்கைக்கு வெளிநாடுகளிலிருந்து ஏற்படக் கூடிய அச்சுறுத்தலை எதிர்கொள்ளவும் கடற்படை விரிவு படுத்தப் பட வேண்டியது அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## ஜே.வி.பி. பெண்கள் அணி நேற்று ஆர்ப்பாட்டம்

மக்கள் விடுதலை முன்னணியின்(ஜே.வி.பி) சோஷலிச மகளிர் அமைப்பினர் நேற்று மாலை அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டமொன்றை கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நடத்தியுளளனர்

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் முக்கியமாக நாட்டில் அதிகரித்துள்ள விலைவாசி உயர்வைக் கண்டித்தும் அரசின் பொருளாதார கொள்கையை கண்டித்தும் கோஷங்கள் எழுப்பியவாறும் சுலோக அட்டைகளைதாங்கியவாறும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். (வ)

## விளையாட்டுத் துறை அமைச்சின் செயலராக தமிழர் ஒருவர் நியமனம்

(கொழும்பு)

இலங்கை சுற்றுலா விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக கலாநிதி பி.இராமானுஜம் ஜனாதிபதியால் நியமிக்கபபட்டுள்ளார்.

இவர் கடந்த 4 வருடங்களாக கால்நடை அபிவிருத்தி தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளராக பணிபுரிந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

### 4 தமிழ் இளைஞா கைதாகினர்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து தைக்கப்பட்ட ஆடைகளை வாங்கிக்கொண்டு மாத்தறைக்கு வந்த நான்கு தமிழ் இளைஞர்கள் மீண்டும் கொழும்பு திரும்பிக் கொண்டிருக்கையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று அதிகாலை 2-00 மணியளவில் முச்சக்கர வண்டியில் கொழும்பு நோக்கி திரும்பிச் சென்றுகொண்டிருக்கையில் கைது செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (ந-5)

### நலன்புரிச் சங்கம் அமைப்பு

இடம்பெயர்ந்த பளைப்பிரதேச மக்கள் தமது நலன் கருதிபிரதேச நலன்புரிச்சங்கம் ஒன்றை அண்மையில் அமைத்துள்ளனர்.

இச்சங்கத்தின் தலைவராக சு.தவரட்ணசிங்கமும் செயலாளராக அ.கேதீஸ்வரனும் பொருளாளராக முருகையனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இத்தெரிவில் பகுதிகளுக்கான ஏழு தலைவர்கள் தெரியப்பட்டுளளதும் குறிப்பிடத் தக்கதாகும். (க)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தினரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களதுஅச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது: